Koviloor Digital Library

ஸ்ரீ

வடவேங்கட
நாராயண சதகம்

மூலமும் - உரையும்

Acc. No. 4132

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
திருமகள் விலாச அச்சுக்கூடம்,
சென்னை.

விலை] 1940 [அணா 2.

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

வடவேங்கட

நாராயண சதகம்

மூலமும் - உரையும்

MADATHIPATHY KOOTIAC
OR MADALAYAM

இஃது

திவ்விய கவி. நாராயணதாச ரவர்கள்

இயற்றியது

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

திருமகள் விலாச அச்சுக்கூடம்,

சென்னை.

இதன் விலை] 1940 [அணா 2.

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

வடவேங்கட

நாராயண சதகம்

மூலமும் - உரையும்

பாயிரம்

நேரிசை வெண்பா

நஞ்சுவினைக் காமமுத னமதுயிரைக் காக்கும்
செஞ்சொல் வினேர்சதகஞ் செப்பியது—விஞ்சுபுகழ்
நாராயண தாசன் நன்றாக நானிலத்தே
பாராயணஞ் செய்ப வர்க்கு.

(இதன் பொருள்.) மிகுந்த புகழுடைய நாராயணதாச ரென்பவர் செஞ்சொற்களினாலே திருவாய் மலர்ந்தருளிய நாராயண சதகமென்னும் பாமாலையானது இந்தப் பூமியினிடத்தில் அன்போடு பாராயணஞ் செய்பவர்களாகிய நமக்கு நம்முடைய ஊழ்வினையை யழிக்கும் விஷமாகும். நம்முடைய உயிரைக் காக்கும் அமுர்தமாகும்.

காப்பு

நேரிசை வெண்பா

நல்லவடவேங்கடத்து நாராயணசதகம்
சொல்லவெனக்குத் துணையாமே—மல்லர்
பணியானதிண்புயத்துப் பாண்டவர்க்குமுன்னந்
துணையானபாதந் துணை.

(இ - ள்.) அழகிய வடக்கின்கணுள்ள திருவேங்கடத்து ளெழுந்தருளிய ஸ்ரீமந் நாராயணன் விஷயமாக ஓர் சதகமென்னும் பாமாலை பாடுகிறதற்குப் பலம் பொருந்திய பசித்ததாகிய அழுத்தமுள்ள புயங்களைப் படைத்த பாண்டவர்க்கு முற்

Koviloor Digital Library

காலத்தில் துணையாயிருந்த அவருடைய பாதங்கள் துணையாயிருப்பது மன்றி என்னுயிர்க்கும் அவைகளே துணையாகும்.

நூல்

கலிவிருத்தம்

பிரிந்திசை வண்ணம்

நீர்கொண்டுதன் மலர்கொண்டுநன் னெறிகொண்டுநின் குறிகொண்டுவன், சீர்கொண்டுவந் தனைசெய்துணைச் செறிவார்களென் பெறுவார்களோ, பேர்கொண்டிலன் பொறிகொண்டிலன் பெரியோர்களா லருள்கொண்டிலன், நார்கொண்டுகண் டருள் சோதியே நாராயணா நாராயணா.

(இ - ள்.) பரிசுத்தமான தீர்த்தங்களையும் குளிர்ச்சி பொருந்திய புஷ்பங்களையுங்கொண்டு நன்மார்க்கத்தை யறிந்து தேவரீருடைய சொரூபத்தைத் தெரிந்து அழகிய ஞானத்தைப் பொருந்தித் தண்டன் சமர்ப்பித்து உம்மை ஆராதனைசெய்து அடைந்தபேர்களெல்லாம் என்ன பலனைப் பெறுவார்களோ அறிகிலேன். நாயினேன் தாஸ்யநாம முதலிய பஞ்சசம்ஸ்காரத்தையும் பாகவதராலே, கிருபையுங் கொண்டவனே அல்ல ஆதலால், அன்பு சுரந்து சந்தோஷித்து இரட்சித்தருளவேண்டும் சோதிமயமாகிய ஸ்ரீமந் நாராயணா, எ - று. 1

பரகாரியம் பலசெய்துனைப் பணியாமலே பிணியானபின், விரசாயிரந் தழுதாவதென் வெறியார்குணங் குறியார்களோ, உரகாரிமே லுபகாரியாயொருசாரியா வுலவாரியா, நரகாரியே முரகாரியே நாராயணா நாராயணா.

(இ - ள்.) கொலை, களவு, காமம், பொய், வஞ்சனை இவை முதலாகிய அனேக துஷ்ட கிருத்தியங்களைச் செய்து தேவரீரைப் பணியாமல் பிணியானது சம்பவித்த பிற்பாடுங் கபடமாயிருந்து அழுதழி

Koviloor Digital Library

ஞலே உண்டாகிய காரியம் ஒன்றுமில்லை. ஆதலால், பயித்தியக்கார குணங்களை நல்லோர்களே யறிந்து இரட்சிப்பது கடன்; அத்தன்மைபோல அடியேனை இரட்சிப்பது உமக்கே கடன்; சர்ப்பங்களுக்குப் பகையாகிய கருடவாகனமீதி லெழுந்தருளி அடியார்களுக் குபகாரமாக ஒப்பில்லாத சேவையாய் உலாவி வந்தருளாநின்ற ஐயனே நரகாசுரனுக்கும் மூரகாசுரனுக்கும் வைரியாகிய ஸ்ரீமந் நாராயணு, எ - று. 2

சிவனீதலம் புயனீதலந் திரனீதல்சந் திரனீதலா, தவனீதல்விண் ணவனீதன்மா தவரீதலோ டெவரீத லும், அதனீதலந் தனிலெண்ணினுன் னடியாரடிப் பொடியாகுமோ, நவநீதமுன் கருமேகமே நாராயணு நாராயணு.

(இ - ள்.) சிவனும், பிர்மாவும், இந்திரனும், சந்திரனும், சூரியனும், தேவர்களும், ரிஷிகளும் இவர்களுடனேகூட பின்னும் யாவர்களுங் கொடுக்காநின்ற பலன்களை யெல்லாம் பூதலத்திலே எண்ணிப் பார்க்குமிடத்தில் தேவரீருடைய அடியார்கள் திருவடித் தூகளும் ஒப்பாக மாட்டாது. ஆதலால், அவர்களை நினைப்பதேயில்லை. கோபாலர் கிரகத்திலே வெண்ணெயை யுண்டருளும் நீலமேக வண்ணனுகிய ஸ்ரீமந் நாராயணு, எ - று. 3

அலசத்தகும் பிணிவந்துநா னலையாமலே யமரர்க்கிடும், மலசத்துள்ளோர் துளிநல்கியென் கவியைக் கொளாய் கருணகரா, குலசக்கரன் சலசேகரன் குலசேகரன் புகழ்சாகரா, நலசக்கரா சலசக்கரா நாராயணு நாராயணு.

(இ - ள்.) தேகமானது வருத்தத்தை யடையும்படியான நோய் வந்து அடியேன் அலையாமலிருக்க தேவர்களுக்குக் கொடுத்தருளாநின்ற கலசத்தமிர்தத்திலே ஒரு துளி கடாட்சித்தருளி அடியேனுடைய கவிதையைக் கைக்கொள்ளவேணுங் கரு

Koviloor Digital Library

ணைத் திருமேனியனே! வச்சிரபாணியுங் கங்காதர னும் குலசேகரராகிய ஆழ்வாரும் தோத்திரம் பண் ணுகின்ற கீர்த்தியாகிய சமுத்திரத்தையும், நல்ல சக் கரத்தையும், தாமரை மலர்போன்ற திருக் கரங்களை யும் உடைத்தாகிய ஸ்ரீமந் நாராயணா, எ - று. 4

எதிரும்பெரும் பிணியும்பறந் திரையுஞ்செறிந் தழிதலும்பறந், துகிரந்திரிந் துடலங்கொளுந் துய ரந்தெளிந் துணைநம்பவர், மதிமயங்கிடந் தொளிருஞ் சடா மகுடந்தொறுந் தொனியும்பவா, னதிவந் தெழும் பதபங்கயா நாராயணா நாராயணா.

(இ - ள்.) தேகத்திலே எதிர்த்து வராநின்ற பெரிதாகிய நோய் மிகுந்து இரைப்பு நெருங்கி அழகு குலைந்து உதிர முறிந்து கொள்ளாநின்ற துக்கமானது தெளிந்துபோய்த் தேவரீரை அடி யேன் நம்பும்படியாக பிரசன்னமாக வேண்டும். சந்திரன் வாசமாய்ப் பிரகாசியாநின்ற சிவனுடைய சடாமகுடந்தோறும் முழக்கம் நிறைந்திட ஆகாய கங்கையானது வந்தருளாநின்ற திருவடித் தாமரை களை யுடைத்தாகிய ஸ்ரீமந் நாராயணா, எ - று. 5

எல்லாருமுன் னுகரத்துளே யென்னுேடுமங் குறைகின்றபேர், அல்லாதுவே றில்லாமையா லனை வர்க்குமே ராருளல்லவே, வல்லாருளார் மாட்டாரு ளார் வறியாருளார் வாழ்வாருளார், நல்லாருளார் பொல்லாருளார் நாராயணா நாராயணா.

(இ - ள்.) அடியேனுடைய ஆத்மகோடிக ளெல்லாந் தேவரீருடைய குட்சிக்குள்ளே வாசம் பண்ணுகிறதே யல்லாமல் வேறே இடமில்லை. ஆத லால், யாவருக்கும் சமானமான கிருபையே யன்றி பேதமில்லையே; அத்தன்மையாயிருக்க, இதிலே வலியரென்றும், மெலியரென்றும், வாழ்வினரென் றும், நல்லவரென்றும், பொல்லாதவரென்றும் உண் டாகிய தென்னமாயமோ ஸ்ரீமந் நாராயணா, எ - று.

Koviloor Digital Library

நீகொசுதா நீதுாசுதா நீயாடுதா நீமோடுதா, போ காதபார் கிடுசோறெனப் புலையர்க்கு நெஞ்சுருகச் சொன்னேன், ஆகாதகா ரியமென்னிடத் தளவற்ற துண் டவையாய்வையோ, நாகாசலா நாகாலய நாராயணா நாராயணா.

(இ - ள்.) பணம் வஸ்திரம் ஆடுமாடுஞ் சாதமு மிவைகளை நீங்கள் கொடுங்களென்று சொல்வதற்கு யோக்கிய மில்லாத பேர்களாகிய மிலேச்சருடைய நெஞ்சானது உருகும்படியாய்க் கவிதை பாடித் தேடிக்கொண்ட பொல்லாத காரியங்கள் கணக் கில்லாம லடியேனிடத்தி லிருக்கின்றன; அவைகளை ஆராய்ந்து பாராமல் இரட்சிக்க வேண்டுஞ் சேஷ மலையையும் சேஷனாகிய கோயிலையும் பெற்ற ஸ்ரீமந் நாராயணா, எ - று. 7

அயனாரெழுத் தளவின்றியே யதிகங்கணப் பொழுதாயினும், பயனாயிருப் பவரில்லையிப் படிமீதி லப் படியன்றியே, வியனாயுனைத் தொழுவார்களவ் விதிவெல்வராய் மறைசொல்லுமே, நயனாரதன் புகழ் சோதியே நாராயணா நாராயணா.

(இ - ள்.) பிரமதேவனானவன் எழுதின பிரகா ரமே அல்லாமல், அதிகமாக க்ஷணப்பொழுதிலும் இந்தப் பூமியிலே பிரயோசனப் பட்டிருக்கிறவ ரில்லை யென்றாலும், அப்படி அல்லவென்று சந்தோஷ மாக தேவரீரைத் தொழுதபேர்க ளெல்லாம் அந்த விதிவசத்தைக் கடந்திருப்பார்க ளென்று வேதங் கள் முறையிடுகின்றதே! நயனத்தோடுங்கூடியநாரத மகாமுனிவர் தோத்திரம் பண்ணுகின்ற சோதிமய மாகிய ஸ்ரீமந் நாராயணா, எ - று. 8

ஓமங்களால் விரதங்களா லுயர்த்தீர்த்தயாத் திரைகோடியால், ஏமங்கள்கன் னியரீதலா லெழு பாரையுஞ் சுழல்கின்றதால், ஆமைம்புலன் கடிகின் றதா லடைபுண்ணியங் கணமேனுமின், நாமம்புகன் றதுபோலுமோ நாராயணா நாராயணா.

Koviloor Digital Library

(இ - ள்.) ஓமங்களாலேயும் விரதங்களாலேயு முயற்சிப் பெற்ற கோடிதீர்த்த யாத்திரைகளாலே யுஞ் சுவர்னங்களுடனே கன்னிகாதானங்களாலே யும் ஏழுபூமியையும் பிரதட்சணம் வந்ததினுலேயும் வராநின்ற புண்ணியங்களெல்லாம் தேவரீருடைய திருநாமத்தை க்ஷணப்போதாகிலுஞ் சொல்லிய புண்ணியத்திற்கு ஒப்பாக மாட்டாது ஸ்ரீமந் நாரா யணு, எ - று. 9

பாடேனலோ கவிசிந்துனே பணிகேனலோ பல காலெழுந், தாடேனலோ பலிபீடமுன் னனுகே னலோ சடகோபமோ, சூடேனலோ வலமாகவே சுழலேனலோ கதியென்றுனே, நாடேனலோ கொ டியேனலோ நாராயணு நாராயணு.

(இ - ள்.) தேவரீரைக் கவிதைகளாலே பாடி னதுமில்லை; தண்டன் சமர்ப்பித்ததுமில்லை; பலகால முமெழுந்து ஆடினதுமில்லை; பலிபீடத்தின்முன்னே வந்ததுமில்லை; சடகோபத்தை முடியிலே சூடினது மில்லை; கதியென்று நினைத்ததுமில்லை; இத்தன்மை யான பாவியானவன் கடைத்தேறு மார்க்க முளதோ ஸ்ரீமந் நாராயணு, எ - று. 10

அறவைக்கெலா மடிமூலநா னருளுக்கெலா மடிமூலநீ, பிறருக்கெலாம் பெருவித்ததும் பெறு விப்பதும் பிணைதட்டிலே, உறவைக்கிலென் னுயிர் காவலுக் கொவ்வா துரைசெய்வனே, நறைவைத் யணிமார்பனே நாராயணு நாராயணு.

(இ - ள்.) லோகங்களுக்கெல்லாம் அடிவேராகி யிருப்பது யானேயன்றி வேறில்லை; கிருபைகளுக் கெல்லாம் மூலகாரணமாகி யிருப்பது தேவரீரை யன்றி வேறில்லை; அயலார்களுக்கு நீ செய்த பலனை யும் இனிச் செய்கின்ற பலனையுந் தராசினுடைய தட்டுகளிலே பொருந்தவைத்தால் என்னுடைய உயிரை இரட்சிக்கிற பலனுக்கு அவை சரியாக மாட் டாது; ஆதலால் வாதுபேசுவதில்லை; தேன் பொருந்

Koviloor Digital Library

தும் திருத்துளபந் தரித்த திருமார்பை யுடைத்தாகிய ஸ்ரீமந் நாராயணா, எ - று. 11

பசியாதமந் திரமேவரும் பழியாதமந் திரந் தான், விசியாதமந் திரநோயிலே விழியாதமந் திர நெஞ்சிலே, மூசியாதமந் திரமோதுவார் முதலான மந் திரமொன்றிலே, நசியாதமந் திரமோநமோ நாரா யணா நாராயணா.

(இ - ள்.) பசியை யெழுப்பாதது எவர்களாலே யும் பழிப்பில்லாதது யமன் பாசத்திற் கட்டுப்படா தது நோயைப் பார்க்காதது நெஞ்சிலே கெடுதலில் லாதது ஓதுவார்க்கெல்லாம் முதன்மையானது ஒன் றிலேயும் நாசமில்லாதது அவை யாதெனில், ஓம் நமோ நாராயணா வென்னுந் திருமந்திரமே யல்லது வேறில்லை ஸ்ரீமந் நாராயணா, எ - று. 12

அபராதமா கியபலசரக் கடலாகவோ டமதேற் றியே, விபரீதோ யலையிற்குளே விடநின்றதூழ் வினையென்செய்வேன், இபராசனைக் கரையேற்றுநீ யெனையேற்றலிங் கரிதல்லவே, நபராசனே சுபரா சனே நாராயணா நாராயணா.

(இ - ள்.) அபராதங்களாகிய பல சரக்குகளை நெருக்கமாகத் தேசமென்னும் ஓடத்திலேற்றி விப ரீத நோயாகிய கடலுக்குள்ளே ஊழ்வினையானது தள்ளி நின்றது என் செய்வேன்; கஜேந்திரனைக் கரையேற்றின தேவரீர் அடியேனைக் கரையேற்று தற்கு இவ்விடத்தில் அரிதல்லவே; வேர்களுக்குஞ் சுபங்களுக்குங் கர்த்தாவாகிய ஸ்ரீமந் நாராயணா, எ - று. 13

வான்சொல்லுமே புவிசொல்லுமே மறைசொல் லுமே நிறைசேடன்வாய், தான்சொல்லுமே முனி வோர் பெருஞ்சபை சொல்லுமேகதி சொல்லுமே, தேன்சொல்லிபங் கிலுறைசொல்லுமே திகைசொல் லுமே திகையாமலே, நான்சொல்லவே துவுமா வெனோ நாராயணா நாராயணா.

Koviloor Digital Library

(இ-ள்.) தேவர்களுடைய நாவும், உலகத்தோருடைய நாவும், வேதங்களுடைய நாவும், கல்வி நிறைந்த ஆதிசேடனுடைய இரண்டாயிர நாவும், பெரிதாகிய சபையோடுங் கூடிய முனிவருடைய நாவும், சந்திரன் முதலாகிய நவக்கிரகங்களுடைய நாவும், தேன்போலுஞ் சொல்லினையுடைய பார்வதி பாகத்தி லிருக்கும் ருத்திரனுடைய நாவும், திக்குப் பாலகருடைய நாவும் தோத்தரிக்கும்படியான தேவரீருடைய கீர்த்தியை மாறுபடாமல் அடியேனுடைய நாவினாலே சொல்வதற்குக் காரணமாவேனோ சொல்லும் ஸ்ரீமந் நாராயணா, எ-று. 14

சுருக்காமருந் துடற்கூறியே சுழற்றுவருந் தழற்றீயிலே, உருக்காமருந் துலர்த்துண்டையா வுருட்டாமருந் துழக்கெண்ணெயில், கருக்காமருந் திகற்கையிலே கசக்காமருந் திருக்கல்லிலே, நருக்காமருந் திருக்கின்றதே நாராயணா நாராயணா.

(இ-ள்.) வெய்யிலிலே சுருங்காதது உடலிலே யூறினாற் சுழற்றாதது அக்கினியிலே யுருக்காதது உண்டையாக வுருட்டி உலர்த்தாதது உழக்கெண்ணெயிலே சுருக்காதது வலிய கைகளிலே கசக்காதது இரண்டு கல்லிலே நெருக்காதது இத்தன்மையைக் கொண்ட மருந்தானது இருக்கின்றது; அது யாதெனில், அஷ்டாட்சரமே யன்றி வேறில்லை ஸ்ரீமந் நாராயணா, எ-று. 15

தகவாயுனைப் புகழாமலே சலமேதொடுத் திகழ்பேசுவார், முகவாயிலே புழுவீழுமே முனையந்தகன் கிளைபோதுமே, ககவாகனா மிகுமோகனா கனகங்களே பரமார்பெலாம் நகவாளினா லரிகேயமே நாராயணா நாராயணா.

(இ-ள்.) மேன்மையாகத் தேவரீரைத் தோத்திரஞ் செய்யாமல் கோபமே பொருந்திய பகையாக இழிவு பேசுவாருடைய முகத்தோடுங்கூடிய வாய்களிலே புழுக்கள் சொரிவதுமல்லாமல், எதிர்க்கா

Koviloor Digital Library

நிறை யமதூதர் மோதுவார்கள். கருடவாகனனே! மேகசொரூபனே! இரணியனுடைய மார்பையும், அவனது சேனைகளையும் நகமென்னும் ஆயுதத்தி னாலே சங்கரியாநின்ற நரசிங்க ரூபமாகிய ஸ்ரீமந் நாராயணா, எ - று. 16

தலமேழையும் படரமோதினுஞ் சலமோவிடா லகிலாண்டநற், பலம்யாவுமென் மனைசேரினும் பசைபோகிடா திசைமாதரார், குலம்யாவுமின் பம் தீயினுங் குறுகாதுமால் பெறுகாயமே, நலமேவுமே பொலமேவுமே நாராயணா நாராயணா.

(இ - ள்.) எழு லோகத்தையும் அழியும்படி யாய்ப் போர்பண்ணினாலுங் கோபங்க ளடங்குவ தில்லை; அகிலாண்டங்களிலே இராநின்ற நன்மை யான பாக்கியங்களெல்லாம் என் வீட்டிலே நிறைந் தாலும் ஆசைகள் ஒழிவதில்லை; பெண்களென் றிசைந்த சாதிகளெல்லாம் இன்பத்தைக் கொடுத் தாலுங் காமங்கள் நீங்குவதில்லை; இத் தன்மையைக் கொண்டு என்னுடைய தேகமானது எந்தத் தன் மையைப் பெறுமோ அறிகிலேன்; பிரகாசியாநின்ற மேகவண்ணனாகிய ஸ்ரீமந் நாராயணா, எ - று. 17

பண்டிட்டதா மரையுந்தியிற் படிவார்நினக் கடியாரெனத், தொண்டிட்டுநின் றொழில்கொள் வதோ துயரத்திலே யடைவிப்பதோ, கொண்டிட்ட நின் புகழ்நிற்கவே குறையாளரைப் புகழ்கின்ற வாய், நண்டிட்டபாழ் வளையையாக்குமே நாராயணா நாராயணா.

(இ - ள்.) பழமையாய் வராநின்ற தேவரீரு டைய நாபிக் கமலத்திலே பொருந்தின உயிர்களை யெல்லாம் அன்பராகும்படி அடிமைகொண்டு கைங் கரியத்தைக் கொள்ள வேண்டுமே யல்லாமல், துக் கங்களடையச் செய்யலாமோ? வேதங்கள் கொண் டிராநின்ற உம்முடைய கீர்த்தியைவிட்டுக் குறைச்ச லான தெய்வங்களைப் புகழாநின்ற வாய்களெல்லாம்

Koviloor Digital Library

கண்டிட்டுத் தோண்டிவிட்ட பாழ்வளைக்கு ஒப்பாவதேயன்றிப் பிரயோசனமில்லை ஸ்ரீமந் நாராயணா, எ - று. 18

பகையானவன் பிணிசெய்ததோர் பதினாயிரம் பிழையுண்டுநான், வகையாகினக் குரைசெய்கிலேன் வருநோயுநின் னருளாதலால், மிகையானபின் முறையிட்டனன் விடுவித்திடாய் விளையாடினால், நகையார்களோ குகையார்களோ நாராயணா நாராயணா.

(இ - ள்.) அடியேனுடைய தேகத்திலே பகையாகிய பொல்லாத பிணியானது செய்யாநின்ற வுபத்திரவங்கள் பதினாயிரமுண்டு; இன்னவிதங்களென்று தேவரீருக்கு விண்ணப்பஞ் செய்கிலேன்; வராநின்ற இந்த நோயானது உமது கிருபையே யல்லாமல் வேறில்லை; ஆதலால் துன்பம்வந்த பிற்பாடு முறையுமிட்டேன்; இதை நீக்கிவிடாமல் விளையாடினால் உலகத்தார் நகைப்பது மல்லாமல் இகழ்ச்சியும் பண்ணுவார்கள் ஸ்ரீமந் நாராயணா, எ - று. 19

குப்புற்றகன் றுடனுவெலாங் குழுவாகவோர் குழலூதவே, மப்புக்கொளுந் தொனிகாதிவவ் வழியேகுபுட் களுமுண்ணவே, துப்புக்குமோர் தயிர் வெண்ணெய்பால் சொரிகைக்குமவ் விடைநங்கைமார், நட்புக்குமா டியகண்ணனே நாராயணா நாராயணா.

(இ - ள்.) துள்ளின கன்றுகளுடனே பசுக்களெல்லாங் குவிந்திருக்கவும், ஆகாயவழியிலே செல்லாநின்ற பட்சிகளுடைய காதுகளிலே கேட்கவும், ஒப்பில்லாத வேணுகுழலூதித் தொனியாக மப்புரேட்டினது மல்லாமல், அங்கிருக்கும் இடைப்பெண்கள் பொழியாநின்ற நெய்க்கும் மோருக்கும் தயிருக்கும் வெண்ணெய்க்கும் பாலுக்கும் அவர்களுடைய நட்பினுக்கும் நடனஞ்செய்த கண்ணனாகிய ஸ்ரீமந் நாராயணா, எ - று. 20

Koviloor Digital Library

தாயிற்றபேர் தாயாகுவாய் தமரிற்றபேர் தம ராகுவாய், சேயிற்றபேர் சேயாகுவாய் செயலிற்ற பேர் செயலாகுவாய், வாயிற்றபேர் வாயாகுவாய் மலைபோலுநோய்க் குனைநம்பினுல், நாயிற்றுமுன் பனிநிற்குமோ நாராயணு நாராயணு.

(இ - ள்.) தாயில்லாத பேர்களுக்குத் தாயாக வும், சுற்றமில்லாத பேர்களுக்குச் சுற்றமாகவும், பிள்ளையில்லாத பேர்களுக்குப் பிள்ளையாகவும், உதவி யில்லாத பேர்களுக்கு உதவியாகவும், வாக்கில்லாத பேர்களுக்கு வாக்காகவும் அருளாநின்ற தேவ ரீரை அடியேன் மலைபோலுங் கொண்ட நோய்க்கு நம்பினுல் சூரியன் முன்னே பனி நீங்குமாப்போலே யன்றி நிற்குமோ ஸ்ரீமந் நாராயணு, எ - று. 21

மந்தன்புதன் குருவெள்ளிசேய் மதிராகுகே தரிநாடொறுந், தந்தெம்பெலா விடமேவினுஞ் சக லேசநின் சரணண்டினுல், எந்தம்பிரா னிவனென்று கொண் டேகாதசப் பலனீவமே, நந்தன்கதா நம்பும் பதா நாராயணு நாராயணு.

(இ - ள்.) சனி, புதன், குரு, சுக்கிரன், செவ் வாய், சந்திரன், ராகு, கேது, சூரியன் இவர்கள் நாடோறுந் தங்கள் தங்கள் பொல்லாத இராசிகளி லே யிருந்தாலும், சகலத்துக்கும் ஈசனே தேவரீரு டைய திருவடியை அடைந்தால் எங்களுடைய தம் பிரான் இவனே யென்று அன்புகொண்டு பதி னோராமிடத்து பலனைக் கொடுப்பார்கள். நந்தகோப னுடைய திருக்குமாரா! நாயினேன் நம்பாநின்ற பரமபதத்தை யுடைத்தாகிய ஸ்ரீமந் நாராயணு, எ-று.

ஆற்றுமையொன் றமையாமையொன் றறியா மையொன் றருளாமையொன், றேற்றுமையொன் றிசையாமையொன் றின்னுமையொன் றிருதாளை யும், போற்றுமையொன் றடியாருடன் பொலியா மையொன் றெருமெய்யிலே, நாற்றுய்விளைந் திட லாகுமோ நாராயணு நாராயணு.

Koviloor Digital Library

(இ - ள்.) அயலார் வாழ்வைக் கண்டு அவதிப் படுதல், பொறுமை நீங்குதல், பேதமை வளர்த்தல், ஈதன் மறுத்தல், முயற்சி யடைதல், இங்கிதம் ஒழித் தல், பொருமை மிகுதல், திருவடிபுகழ் விடுதல், அடி யாருடன் கூடாதிருத்தல் இவைகளெல்லாம் நாயி னேனுடைய ஒரு தேகத்துக்குள்ளே நாற்றுக்குள் போல வளரலாமோ ஸ்ரீமந் நாராயணா, எ - று. 23

தன்மைக்குநீ யடியேனுடைச் சலிகைக்குநீ பொலிகைக்குநீ, மேன்மைக்குநீ வன்மைக்குநீ மிகு திக்குநீ தகுதிக்குநீ, புன்மைக்குநீ புலமைக்குநீ பொறுமைக்குநீ மறுமைக்குநீ, நன்மைக்குநீ தின் மைக்குநீ நாராயணா நாராயணா.

(இ - ள்.) அடியேனுடைய ஒழுக்கத்துக்கும், சலிகைக்கும், பிரகாசத்துக்கும், மெலிகைக்கும், வலி மைக்கும், குற்றத்துக்கும், முயற்சிக்கும், பொல் லாங்குக்கும், அறிவுக்கும், பொறுமைக்கும், மோ க்ஷத்துக்கும், நன்மைக்கும், தின்மைக்குஞ் சகலத் திற்குந் தேவரீரே யல்லாமல் வேறில்லை ஸ்ரீமந் நாரா யணா, எ - று. 24

வேட்பித்ததுன் பெருநெஞ்சமே வியப்பித்த துன் விளையாடலே, கேட்பித்ததுன் பலநூல்களே கிளர்பித்ததுன் மதிவாசமே, பேட்பித்ததுன் கன சத்தியே பிழைப்பித்தவெம் பிணிப்பித்தவாழ், நாட் பிச்சையுந் தரவேண்டுமே நாராயணா நாராயணா.

(இ - ள்.) உமது திருவுள்ளமே எனக்கு இன் பம் தந்தது; உமது திருவிளையாடலே எனக்குச் சந் தோஷஞ் செய்வித்தது; உமது திவ்விய பிரபந்த முத லாகிய புராணங்களை எனக்குக் கேட்கப் பண்ணி யது; உமது திருப்பதிகளே எனக்கு வாசத்தை யுண் டாக்கியது; உமது கனம்பொருந்திய வலிமையே எனக்கு ஆதரவு புரிந்தது; ஆதலால் அடியேனு டைய குற்றத்தையும், வெவ்விதமாகிய நோயையும்

Koviloor Digital Library

நீக்கிவிட்டு, இனி வாழ்நாளாகிய பிச்சையுந் தர வேண்டும் ஸ்ரீமந் நாராயணா, எ - று. 25

பூரிக்குநின் கொடியென்னவே புளகிக்குநின் சனமென்னவே, ஈரிக்குநின் சபையென்னவே யிர திக்குநின் புகழென்னவே, ஆரிக்குணம் பெருதேவர்தா னடியாருளத் தானந்தமே, நாரிக்குவில் லொடியச் செய்தாய் நாராயணா நாராயணா.

(இ - ள்.) உமது கருடக்கொடியே யென்றால் எனது தேகம் பூரிக்கும்; உமது அடியார்களே யென்றால் எனது மயிர் புளகிக்கும்; உமது சபையே என்றால் எனது கண்களிலே ஆனந்தபாஷ்பம் பெருகும்; உமது புகழே என்றால் எனது மனம் ரம்மிக்கும்; ஆதலால், இத்தன்மையான குணத்தைத் தேவர்களிலே எவர்கள்தான் பெற்றார்கள்; பாகவதருடைய இருதயத்தில் ஆனந்தமானவனே! சானகிக்காக ருத்திரன் வில்லை ஒடியச் செய்தருளானின்ற ஸ்ரீமந் நாராயணா, எ - று. 26

தேன்பாடிதா வனமாலையந் திருவாழிசங் கழமேந்தியே, தான்பாடிநா ரதனாடுமுன் சபைமானிடர்க் கதிதூரமே, வான்பாடியுட் புயலொன்றுதான் வருமென்றுவா டுவதென்னவே, நான்பாடினால் வரவேண்டுமே நாராயணா நாராயணா.

(இ - ள்.) நாரதமுனியானவர் பாடியாடானின்ற தேவரீருடைய சபையானது மானிடர்களுக்கு அதிக தூரமாக விருக்கும். ஆதலால் வரக்கூடாது; வானம்பாடி யென்னும் பட்சியானது நீருண்ட மேகங்கள் என்றைக்கு வருமோவென்று மனது வாட்டங் கொள்வதுபோல, அடியேன் வருந்தி பாடினால் அத்தன்மைபோல வந்து இரட்சித்தருளவேண்டும் வண்டுகள் பாடித் தாவானின்ற ஸ்ரீமந் நாராயணா, எ - று. 27

மானேயுநின் னருளுற்றளாய் வாய்நீருமர்ந் தாயங்ஙனே, ஆனேடுநின் னருளற்றநாள் சஞ்சீவி

Koviloor Digital Library

யைத் தளியேதுமே, தாஞேரையண் டினபேர்கடா மடியாருளத் தானந்தமே, நாஞேதவா ஞாஞேதயா நாராயஞு நாராயஞு.

(இ - ள்.) மகத்தாகிய நோய்களெல்லாந் தேவரீருடைய கிருபையைப்பெற்ற நாளையிலே உமிழ் நீரே மருந்தாகி அங்ஙனே ஓடிப்போகும். உமது கருணையில்லாத காலத்திலே சஞ்சீயைக் கொடுத்தாலுந் தள்ளிவிட்டு அதிகமாகு மாதலால் இதை யறிந்தபேர்களை அடைந்த பேர்கள் சுகத்தைப் பெறுவார்கள் அடியார்கள் இருதயத்தில் ஆனந்தமானவனே! நாயினேன் தோத்திரம் பண்ணிஞல் ஞான உதயஞ் செய்தருளவேண்டும் ஸ்ரீமந் நாராயஞு, எ - று.

ஈசன்பரன் பிரமன்பிதா விறைவிண்டுவண் டுறைதண்டுழாய், வாசன்சரா சரனென்றுநின் வழியன்பர்வாழ் வநிதன்னிலே, தீசங்கடம் பிணிதாமுமே சிறைசண்டைவஞ் சனைவீழுமே, நாசங்கடந் துயிர்வாழுமே நாராயஞு நாராயஞு.

(இ - ள்.) ருத்திரனுக்குப் பரமனே யென்றும், பிரம்மனுக்குத் தந்தையே யென்றும், கர்த்தனே என்றும், விஷ்ணுவே என்றும், வண்டுகளுடனே குளிர்ச்சி பொருந்தாநின்ற திருத்துழாயினிடத்தில் வாசனே என்றும், சராசரங்களானவனே என்றுந் தேவரீரைத் தோத்திரம்பண்ணி வழிபடாநின்ற அடியவர்கள் வாழ்ந்தருளுந் தலங்களிலே பொல்லாத சங்கடங்களும், நோய்களும், சிறைகளும், போர்களும், வஞ்சனைகளும், இவை முதற் குற்றங்கள் யாவும் நீங்கி, மற்ற வுயிர்களெல்லாம் வாழ்ந்திருக்கும் ஸ்ரீமந் நாராயஞு, எ - று. 29

ஆபாதவா யுனைவாழுமே யடியாருடன் படைபண்ணுமே, மாபாவநால் பலகற்குமே மறையன்னுவா நியர்தம்மினும், ஓபாவியே னிவைநின்முனே யுரைசெய்தனன் விரைசெய்தபூ, நாபாபரா பரனேநீ நாராயஞு நாராயஞு.

Koviloor Digital Library

(இ - ள்.) அபத்தம் நிறைந்த என்னுடைய வாயானது தேவரீரை வைதுகொண்டே யிருக்கும்; அடியார்களுடன் போர் பண்ணிக்கொண்டேயிருக்கும்; மகத்தாகிய பாப சாஸ்திரங்களையே கற்கும். ஆதலால் வேதத்திலே சொல்லாநின்ற விரோதிகளைப் பார்க்கிலும், அதிகரித்திராநின்ற விரோதியாகிய நாயினேன் தேவரீர் சந்நிதானத்திலே விண்ணப்பஞ் செய்துவிட்டேன். உனதுசித்தம் எனது பாக்கியம். வாசனைசேர்ந்த நாபிக்கமலம் பொருந்தாநின்ற பராபரனென்னும் அரிதாகிய ஸ்ரீமந் நாராயணா, எ - று.

கற்பாலினிற் கடவாதவன் கலிகாலமே திரையாடிடுந், தோற்பாவைநா னதுமெச்சவே தொடுசூத்திரத் துறைகாரனீ, மேற்பாவபுண் ணியமானநல் வினைதீவினைக் கெவராகுவார், நாற்பாலினுக் கொருமூலமே நாராயணா நாராயணா.

(இ - ள்.) கடலிலே உதித்துவராநின்ற சூரியனாலே அறியும்படியான காலப்பிரமாணத்தோடு கூடிய கலிகாலமே திரையாகவும், ஆடாநின்ற தோற்பதுமை யானாகவும், மனது மெச்சும்படியாய் தொடுக்காநின்ற சூஸ்திரத்துறைக்காரர் தேவரீரானால், மேலே வராநின்ற பாப புண்ணியங்களுக்கு அதிகாரிகள் எவராகுவார்கள். இந்த நியாயத்தைத் தெரியப்படுத்தவேண்டும். பறப்பன ஊர்வன நடப்பன இருப்பனவாகிய நான்குவித சாதிகளுக்கெல்லாஞ் சமானமான ஆதரவு தேவரீரே யன்றி வேறில்லை ஸ்ரீமந் நாராயணா, எ - று. 31

இறையாலெழுஞ் சுவரானநா லிருசானுடம் பிடியாமலே, கரையாமலே தகராமலே கழலாமலே யழலாமலே, திரையாமலே வினைமூடிகண் டிறவாமலே வகையென்னைதா னரையாதசோ றிடுமையனே நாராயணா நாராயணா.

(இ - ள்.) ஆகாயத்திலே வளராநின்ற எண்சாணுடம்பாகிய சுவரானது கரைந்துபோகாமலும்,

Koviloor Digital Library

இடிந்து போகாமலும், யதிர்ந்து போகாமலும், வெந்து போகாமலும், இரைந்து போகாமலும், வினையினாலே இறந்துபோய் மறுபடியும் பிறந்து விழி திறவாமலும் இருக்கும் வகை யாதெனில், நரை திரை மூப்பில்லாத அமுதத்தைக் கொடுத்தருள வேண்டும் என்னையனுகிய ஸ்ரீமந் நாராயணா, எ - று.

புற்கொண்டுவாழ் பசுவாரெடார் புலிபாழ்கிணற் றிடைவீழினுங், கற்கொண்டுவா தடிகொண்டுவா மடிதென்பரப் படுபாவிநான், எற்கொண்டநோய்க் கெவராகுவா ரினிநீயலா திலையெட்டியும், நற்கொண் டலால் வளர்கின்றதே நாராயணா நாராயணா.

(இ - ள்.) புல்லையுண்டு வாழாநின்ற பசுவானது கிணற்றிலே விழுந்தால் கண்டவர்கள் யாரேனும் எடுத்துவிடுவார்கள்; புலியானது விழுந்ததானால் சீக்கிரமாய்க் கற்களுந் தடிகளுங்கொண்டு கொல்லுவார்கள். அத்தன்மைப்போலப் படுபாவியான என்னுடைய தேகத்திலேகொண்ட நோயைத் தீர்க்க எவரிருக்கிறார்கள்; இனி தேவரீரை யன்றி வேறில்லை. மழையினாலே எட்டிச்செடியும் வளர்வது போல உம்முடைய கிருபையினாலே அடியேனும் வளரவேண்டும் ஸ்ரீமந் நாராயணா, எ - று. 33

அரசன்கையா லபயம்பெறா ரயலாளுமன் னரையண்டினால், வரசங்கரா தியரஞ்சுவார் வருகென்னமேல் வகையென்னதான், நரசிங்கனே முரபங்கனே நாராயணா நாராயணா.

(இ - ள்.) தாங்கள் நம்பியிருக்கும் அரசனாலே பிரயோசனமில்லை யென்று மறு மன்னவரிடத்திலே சேர்ந்தால் சந்தோஷித்து எதிரேவந்து இடங்கொடுத்து இரட்சிப்பார்கள். அத்தன்மையாகத் தேவரீரை நம்பினபேர்கள் யாவரேனும் உம்மை வினவாமல் வெறுத்துப் பக்கத்திலே சென்றால், முக்கியமான சங்கரன் முதலாகிய தேவதைகளானாலும் இரட்சிக்கப்பயப்படுவார்கள். ஆதலால், கதிவே

Koviloor Digital Library

றில்லை. அடியேனை வாவென் றழைக்க வகை யென்ன வெண்ணியிருக்கிறீரோ தெரியாது; நர சிங்கரூபனே முரகாசூரனைக் கொன்ற ஸ்ரீமந் நாரா யணா, எ - று. 34

கோட்சொல்லுவேன் வசைசொல்லுவேன் குறைசொல்லுவேன் முறைசொல்லுவேன், கீட் சொல்லுவேன் மிகைசொல்லுவேன் கிலிசொல்லு வேன், சூட்சொல்லுவேன் னயனூழிநாள் சொல வேண்டினுஞ்சிறிதுன்னையோர், நாட்சொல்லுவேன் றறிகின்றிலே நாராயணா நாராயணா.

(இ - ள்.) பிரமகற்பபரியந்தம் அடியேனுடைய நாவானது கோள்களும் வசைகளும் குறைகளும் முறைகளும் கீழ்மைகளும் குற்றங்களும் பயங்களும் வலிமைகளும் வஞ்சனைகளும் இவைகளைச் சொல் லுமே யன்றி, கொஞ்சமாகிலும் தேவரீர் நாமத்தை ஒருநாளையிலேனும் சொல்லும்படியா யறிந்தே னில்லை ஸ்ரீமந் நாராயணா, எ - று. 35

ஆளாகிகின் றிருநாலெழுத் தறியாதநா ளறி வார்களைக், கோளாதநாள் செவியூரவேகிடையுந்தா ளதிலாசையே, மூவாந்தனிலமீதுதான் முதனாளிலங் கெழுதாதநாள், நாளாகுமோ வாளாயுதா நாராயணா நாராயணா.

(இ - ள்.) ஆசாரியனுடைய திருவடிகளுக்கு ஆளாகித் தேவரீருடைய திருமந்திரத்தை யறியாத நாளும், தெரிந்த பாகவதரைக் கேளாதநாளும், செவிகளிலே யூரும்படியாய்ப் பொருந்தாதநாளும், அதிலே ஆசையானது பெருகாதநாளும், அஞ்சா வது வயதில் முதல்நாளையிலே பள்ளிக்கூடத்தில் அரியென்று நிலவெழுத்தாகிலும் எழுதிவையாத நாளும் பலனல்ல நாளாகுமோ? வாளாயுதத்தை யுடைய ஸ்ரீமந் நாராயணா, எ - று. 36

வீட்டுக்குளே துணையாவதும் வெளியிற்குளே துணையாவதும், கூட்டுக்குள்ளே துணையாவதுங்குன்

Koviloor Digital Library

றுக்குளே துணையாவதும், காட்டுக்குளே துணையாவதுங் கடலுக்குளே துணையாவதும், நாட்டுக்குளே துணையாவது நீயன்றில்லை நாராயணா நாராயணா.

(இ - ள்.) வீட்டினுக்குள்ளே துணையாயிருப்பவனும், வெளியினுக்குள்ளே துணையாயிருப்பவனும், சந்திரனுக்குள்ளே துணையாயிருப்பவனும், மலையினுக்குள்ளே துணையாயிருப்பவனும், காட்டினுக்குள்ளே துணையாயிருப்பவனும், கடலினுக்குள்ளே துணையாயிருப்பவனும் நீயேயன்றி வேறில்லை; ஸ்ரீமந் நாராயணா, எ - று. 37

வாய்கின்றதேன்புகையுண்ணலா மணக்கின்ற சாந்தரையுண்ணலா, காய்க்கின்றமா வெறியுண்ணலாங்கறக்கின்றவர்க்கட்டுண்ணலாம்,தோய்க்கின்ற பால் கடைபுண்ணலாஞ் சுவைகெட்டமா னிடவாலிலா,நாய்க்கிந்தவாதனையேனையாநாராயணாநாராயணா.

(இ - ள்.) தேன் கூண்டினுக்குப் புகைத்தலுஞ் சந்தனக்கட்டையினுக்குத் தேய்த்தலும் பழுத்தமாத்தினுக்கு கல்லெறிதலுங் கறக்கும் பசுவினுக்குக் கயிரணைத்தலுந் தோய்த்த தயிரினுக்கு மத்தாலுடைத்தலும் இவைகளுக்கிந்தஉபத்திரவமுண்டாகில்பிறருக்குபகாரமாகும் உரிசையும் வாலுமில்லாத மானிடமென்னும் நாயினுக்கு இந்த வாசனையைக் கொடுத்தீரோ? இதனாலே உமக்கென்னபிரயோசனமுண்டு; தெரியச்சொல்லும் ஸ்ரீமந் நாராயணா, எ - று. 38

தும்பிக்கையானையுமையவர்முன் றுகிலோடு வாடியநங்கையும், தம்பிக்கையாமகயோகருந் தாநீற்கவேசதுர்வேதியன்,சம்பிகையாலரனுக்குநீகனியைபிட் டினியையமேன், நம்பிக்கையாகிய தெய்வமே நாராயணா நாராயணா.

(இ - ள்.) கஜேந்திரனையும், பாண்டவரையும், வஸ்திரம் நீங்குவதென்று வாடின துரோபதையையும், ஸ்தம்பிதமா யிருந்து தவம்பண்ணுகின்ற மகத்தாகிய யோகிகளையும் இரட்சித்த திருக்கட்டும். நான்கு

Koviloor Digital Library

வேதத்தையுமுடைத்தாகிய பிரமனுடைய சிரத்தைக் கிள்ளின சிவனுக்குப் பிச்சையிட்டுச் சாபத்தைத் தீர்த்த பிற்பாடும், இனி பரத்துவம் வேறேயென்று ஐயப்படலாமோ? நம்பிக்கையான தெய்வம் நீயே யன்றி வேறில்லை ஸ்ரீமந் நாராயணா, எ - று. 39

பாலாவதோ தேனாவதோ பழமாவதோ பாகா வதோ, மேலானசர்க் கரையாவதோ விரையாருநல் லமுதாவதோ, கோலாகலப் பிணிதீரவே குளியங்க ளோ வனமூலியோ, நாலாவதோ நின்பேர்சொ லாய் நாராயணா நாராயணா.

(இ - ள்.) அடியேனுடைய தேகத்திலே கோலா கலஞ் செய்யாநின்ற நோயைத் தீர்க்கும்படியான தேவரீருடைய திருநாமமானது பாலாகியதோதேனா கியதோ பழமாகியதோ பாகாகியதோ மேலாகிய சருக்கரையாகியதோ வாசனைசேர்ந்த நல்லமிர்தமாகி யதோ வனமூலிகை யாகியதோ இவை யல்லாமல் மணிமந்திர அவிழ்தம் இவை மூன்றுக்கு மேலாகிய என்னென்று சொல்வோம் ஸ்ரீமந் நாராயணா, எ-று.

பூவுக்குநல் லதுசொல்லவோ பொலிசீதளம் புது வாசமே, தேவுக்குநல் லதுசொல்லவோ செவியார்மு னெதிர்நிற்பதே, ஆவுக்குநல் லதுசொல்லவோ வது சாதுவா யமுதீவதே, நாவுக்குநல் லதுசொல்லவோ நாராயணா நாராயணா.

(இ - ள்.) புட்பங்களுக்குள்ளே நல்லது சொல்ல வேண்டுமானாலும் காந்தியுங்குளிர்ச்சியும் புதியவாச னையும் உண்டாகிய புட்பமேயன்றி வேறில்லை; தெய் வங்களுக்குள்ளே நல்லது சொல்ல வேண்டுமானால் முறையத்தைக் காதிலே கேட்கு முன்னே அடியார் களுக்குப் பிரசன்னமாகிய தெய்வமேயன்றி வே றில்லை; பசுக்களுக்குள்ளே நல்லது சொல்லவேண்டு மானால் அது வெகுசாதுவா யமுதத்தைக் கொடுக் கும் பசு அன்றி வேறில்லை; நாவுகளுக்குள்ளே நல் லது சொல்லவேண்டுமானால் தேவரீருடைய திரு

Koviloor Digital Library

நாமத்தைச் சொல்லிய நாவே யன்றி வேறில்லை ஸ்ரீமந் நாராயணா, எ - று. 41

ஆனந்தமா யழுவார்முனே மலர்சூடியே தொழுவார்முனே, மோனந்தனிற் கரைவார்முனே முகுலென்னவே புகழ்வார்முனே, தானந்தவம் புரிவார்முனே நானென்செய்கே னிவையொன்றிலே நாராயணா நாராயணா.

(இ - ள்.) தேவரீருடைய திருவடியை நினைத்து ஆனந்தபாஷ்பங்களைக் கண்களிலேபெருகுவார்களுக்குமுன்னே புட்பங்களை யலங்காரஞ்செய்து தண்டஞ் சமர்ப்பிப்பார்களுக்கு முன்னே மௌனதியானத்திலே உள்ளங் கரைந்திடுவார்களுக்கு முன்னே பசுங்கொண்டலேயென்று புகழ்ந்திடுவார்களுக்கு முன்னே தானங்களுந் தவங்களுஞ் செய்திடுவார்களுக்கு முன்னே சரணாகதி செய்திடுவார்களுக்கு முன்னே அடியேன் இவைகளிலே ஒன்றாகிலும் செய்ய மாட்டுவேனோ ஸ்ரீமந் நாராயணா, எ - று.

செரிகின்றவூ ணுகர்வேனலேன் சிரிக்கின்றகாரியமேசெய்வேன், கரிக்கின்றகண் படையேன் வெறுங்கழுப்பன்கொடுங் கடுவஞ்சகன், பரிக்கின்ற நின் னடியாரொடும் பழகேனலேன் படர்வந்தபின், நரிக்கின்றனே னினியென்செய்வே நாராயணா நாராயணா.

(இ - ள்.) சீரணமாகும்படியான ஆகாரத்தைக் கொள்ளாமல் நகைக்கும்படியானகாரியமேசெய்து தெரிசன அபேட்சையான கண்ணையும் படையாமல் அன்பைப்பிரிக்கா நின்ற அடியாருடனேயுங் கூடாமல் விருதாவாகிய கழுப்பனாகவும் பொல்லாத விஷம் போலும் வஞ்சகனான உத்தரித்துத் துன்பம் வந்தபிற்பாடு அவதியைக் கொள்ளா நின்ற நாயினேனினியென் செய்வேன் ஸ்ரீமந் நாராயணா, எ - று.

ஆதாரதே வதையென்பனோ வடியேனையாளாயென்பனோ, ஓதாதுணர்ந் திடவன்புகூ றுபதே

Koviloor Digital Library

சதே சிகனென்பனே, மாதாபிதா வுடலாவிநீ மனே காணிபொன் வலிசெல்வநீ, நாதாவுநீ தாதாவுநீ நாராயணு நாராயணு.

(இ - ள்.) ஆதாரமாகிய தேவதையே யென்பனே, அடியேனையாளுங் கர்த்தனே யென்பனே, பல நூல்களை யோதாமல் தன்னிலே யறிந்திட நட்பு செய்யா நின்ற உபதேச குருவே யென்பனே என்னென்று சொல்வேன்; தாயுந் தந்தையுந் தேகமும் உயிரும் பெண்சாதியுங் காணியுந் திரவியமும் வலிமையுஞ் செல்வமும் நாதனும் பிரபுவும் நீயேயன்றி வேறில்லை ஸ்ரீமந் நாராயணு, எ - று. 44

வடுநிந்தையே னிடுவந்தியேன் மருள்விஞ்சினே னருளஞ்சினேன், அடுசிந்தையே னெடுவிந்தையே னலைபண்பினே னுனைநம்பினேன், விடுவதுன்பிலே முடுகலம்பிலேன் வினைமண்டிலே னுனையண்டினேன், நடுவொன்றிலே மிடைகுன்றுமோ நாராயணு நாராயணு.

(இ - ள்.) குற்றம் பொருந்திய நிந்தையையும் இடுவந்தியையும் மிகுந்த மயக்கத்தையும் அருளில்லாத பொல்லாத இருதயத்தையும் பலவித துர்நடத்தையும் காரிய மென்கிற அலைச்சலையுந் தீவினையையும் இவைகளைக் கொண்டிராநின்ற நாயினேன் இரக்கத்திலே பயந்தவனுகி அன்பிலே தூரித மில்லாதவனுகி ஒழிவில்லாமல் தேவரீரை யடைந்தேன்; மத்தியிலே யின்னமொரு விதத்தினுலே எனது வருத்தம் நீங்குமோ ஸ்ரீமந் நாராயணு, எ - று. 45

குடிநீர்கொடீர் முகவேதிடீர் குடவெண்ணெயை வடியீர்பிரம், படியீர்வெணி றெறிவீர்விழிக் கதிகோரவஞ் சனமேயிடீர், கடியீர்வயித் தியரால்வராகமதாடுகுக் குடமிட்டுளே, நடியீரெனிற் பிணியஞ்சுமோ நாராயணு நாராயணு.

(இ - ள்.) குடிக்கும்படியாய் கியாழங்கள் நீர் கொடுங்களென்றும், மூலத்துக்கு வேது பிடியுங்க

Koviloor Digital Library

ளென்றும், குடத்திலே எண்ணெயைக் காய்த்துக் கொடுங்களென்றும், பிரம்பு கொண்டடித்து வெளுத்த விபூதியை யெறியுங்களென்றும், கண்களுக்கு அதிகோரமாகிய கலிக்கம் போடுங்களென்றும், வயித்தியருக்குக் காட்டித் தீருங்களென்றும், பன்றியும் ஆடும் கோழியும் பலி கொடுத்துச் சன்னதமாடிப் பாருங்க ளென்றுஞ் சொல்லினல் இவைகளாலே நோய் தீர்வதுண்டோ ஸ்ரீமந் நாராயணா, எ-று.

(இ-ள்.) பிரம்புக்குமுள் ளிடுமாதரைப் பிணி கட்டுநீள் பிணியுற்றவென், உரம்புக்குளே யறியாததெ னுலகத்தெலா முறைசோதிதோல், நரம்புக்குளே யெலும்புக்குளே புகவெட்கியோ நாராயணா நாராயணா.

(இ-ள்.) முள்ளுகளோடுங் கூடிய பிரப்பம் புதருகளுக்குந் தாமரைப் பிணையல்களுக்கும் மிகுந்த நோய் கொண்டிரானின்ற என்னுடைய நெஞ்சுக்குள்ளே நுழைந்தறியாமல் யிருப்பதென்னே! உலகத்திலிருக்கும் எல்லா உயிர்கள்தோறும் வாசம் பண்ணு நின்ற சோதி நீயன்றி வேறில்லை; ஆதலாலிது தோலுடம்பும் வழும்பும் நிணமும் நரம்பும் முதலிய நாற்றமானபடியினாலே புகுந்தறிதலுக்கு வெட்கமாகியதோ ஸ்ரீமந் நாராயணா, எ-று. 47

மன்றாடியே யதிசோபன மழைவண்ணனே விசயங்கரா, வென்றாய்செயஞ் செயுமச்சுதா மிக வாழிகே சவனேசுபங், கன்றால்விளா வெறிந்தாய் பெருங் கலியாணமங் கலமாதவா, நன்றாய்வேங் கடநாயகா நாராயணா நாராயணா.

(இ-ள்.) கோபிகாஸ்திரிகளுடைய சபையிலே நடனம் பண்ணு நின்றவனே! உனக்கதிக சோபனம் மேக வண்ணனே! உனக்கு விசயம் முதலையை வென்றவனே! உனக்கு செயம் அச்சுதனே! உனக்கு மிகுந்த வாழி கேசவனே! உனக்குச் சுபம் கன்றால் விளாங்கனி எறிந்தவனே! உனக்குப் பெரிதா

Koviloor Digital Library

A. No. 44329

நூலகம், கோவிலூர்

கிய கலியாணம் மாதவனே! உ... ...
வேங்கடநாயகா! நீ இத்தன்மையாக நன்றாக யிரு
க்க வேண்டும் ஸ்ரீமந் நாராயணா, எ - று. 48

இந்தாவென வெனதிச்சைநீ யெளிதீவையே
லிழிவாகுமோ, சந்தானமா மலராலருச் சனைசெய்கு
வார் தவிர்வார்களோ, வந்தானபேர் துதியார்களோ
வசுதேவர்சொற் குறையாகுமோ, நந்தாதபெண்
ணகைசெய்வளோ நாராயணா நாராயணா.

(இ - ள்.) அடியேனுடைய இச்சையானபடி
யே இங்கே வாவென்று தேவரீர் எளிதாகப் பல
னைக் கொடுத்தருளினால் உமக்கு இகழ்ச்சியாகுமோ
கற்பக மலரினாலே அருச்சனை செய்யா நின்ற
தேவர்கள் விட்டு விடுவார்களோ சந்நிதானத்தில்
வந்த பேர்கள் துதியார்களோ வசுதேவருடைய
உடமையிலே குறைந்து போகுமோ அழிவில்லாத
ஸ்ரீ மகாலட்சுமி நகைப்பாளா சொல்லும் ஸ்ரீமந்
நாராயணா, எ - று. 49

சிற்றப்பனோ துருவர்க்குநீ தெதிபாண்டனார்
பெரியப்பனோ, கற்றத்தைதே வகிதங்கையோ கண்
டாகனன் மிதிலேசனோ, சுற்றத்தாரோ பெறுவோ
ரெலாந் தொடுவேன்வழக் கிடுவேன்விடேன், நற்றப்
படும் பொருட்டந்துபோ நாராயணா நாராயணா.

(இ - ள்.) தேவரீர் முன்னாளையிலே இரட்சித்த
பேர்களுக்குள்ளே துருவமகாராசனுனக்குசிற்றப்ப
னோ தெதிபாண்டனென்னும் குயவன் உமக்குப்
பெரியப்பனோ கல்லுருவம் போக்கிக் கிளிபோல
பேசப்பண்ணுகின்ற அகலிகையானவள் தேவகிக்
குத் தங்கையாகிய உமது சிறிய தாயாரோ கண்டா
கனனென்னும் விரோதியானவன் உமக்குப் பெண்
கொடுத்த மிதிலைச் சனகமகாராசனாகிய அம்மானோ
இன்னம் பேறுபெற்ற பேர்களும் பெறும் பேறுக
ளும் உமக்கு உறவின் முறையார்களோ ஆதலால்
சம்பந்தமில்லாத பேரையெல்லாம் இரட்சித்தபடியி
னாலே தேவரீருக்கும் அடியேனுக்கும் வழக்கு விடு

Koviloor Digital Library

வதில்லை ஆசைப்பட்ட பலனைக் கொடுத்து அப்புறம் போகவேண்டுமே யன்றி போகக்கூடாது ஸ்ரீமந் நாராயணா, எ - று. 50

தன்னெட்டெழுத் தயன்மத்தகந் தனிலே பொறித் தடிநாவிலே, உன்னெட்டெழுத் தெழுதா மையா லுலகத்துளோ ரவனைத்தொழார், கன்னெட் டிடத் தருநெட்டிடக் கனனெட்டிடக் கனகாலி பின், நன்னெட்டலாந் தொடர்பாதனே நாராயணா நாராயணா.

(இ - ள்.) பிரமதேவனானவன் உலகத்திலே யுள்ள மானிடர்களுடைய தலைகளிலே தனது நெட் டெழுத்தை மாத்திரம் எழுதி நாவுகளிலே தேவரீ ருடைய அஷ்டாட்சரத்தை யெழுதாமற் போன படியினாலே அவனை ஒருவருந் தேடுகிறதே யில்லை. முல்லை நிலத்திலே கல்லுகள் நெட்டிடவும் விருட்சங் கள் நெட்டிடவும் அக்கினிகள் நெட்டிடவும் விஸ் தாரமாகிய பசுக்கள் பின்னாலே நன்மைபெற நெடி தான தூரமெல்லாம் நடந்தருளா நின்ற திருவடியை யுடைத்தாகிய ஸ்ரீமந் நாராயணா, எ - று. 51

உரலுக்குமோ ருறுபஞ்சமோ வுனைநச்சினே னெனையச்சமன், விரலிட்டுதேர் வினைவல்லனோ விதி கைக்குமழ் விரலோசையால், பொரலுற்றநோய் கழ லப்பணாய் புதிதாமருந் தொருதூதனால், நாளைக்கு ளாய் வரவேண்டுமோ நாராயணா நாராயணா.

(இ - ள்.) குத்தாநின்ற உரலினுக்கு ஒரு காலத் திலேயும் தரித்திரம் வருவதில்லை; அத்தன்மைபோ லத் தேவரீரிடத்திலே நிரம்பிய ஐசுவரியமே யன்றி இல்லாததில்லை; ஆதலால் உம்மிடத்திலே இச்சை கொண்டேன். இனி என்னை அந்த யமனானவன் விரல்விட்டுக் காட்டி யறிந்து வினைசெய்ய மாட்டு வனோ பிரமாவினுடைய கைகளிலே யிராநின்ற விர லும் என்றலையிலே எழுத அமையமாட்டாது; வருத் தத்தைச் செய்யாநின்ற நோயைத் திரும்படியாய் செய்வதற்கும் புதிதாய் ஒப்பில்லாத சஞ்சீவியானது

Koviloor Digital Library

அநுமாராலே வரவேண்டுமோ க்ஷீராப்தி வாசனாகிய ஸ்ரீமந் நாராயணா, எ - று. 52

சமையாதிதே வதையென்பதுஞ் சமையாதி நின் பெயரென்பதும், உமையாளுடன் பரமன்புரிந் துனைமாமறைப் பொருளென்பதும், கமையாள்வ தென் றிமையோர்திலோத் தமையாதியுன் புகழ் கின்றதும், நமையாமலே யெனையாளுவாய் நாரா யணா நாராயணா.

(இ - ள்.) சமயங்களுக்கெல்லாம் அதிதேவதை நீயே யென்றும், மரண சமயத்துக்கு ஆகியது உம் முடைய பெயரேயென்றும், மகத்தாகிய வேதப் பொருள் நீயேயென்றும், உமையவளுக்குச் சிவன் புரிந்து நிச்சயம் பண்ணினதும் தேவதைகளுக்குந் திலோர்த்தமைக்கும் அதிபனாகிய தேவேந்திரன் தங் களை இரட்சிக்குங் கர்த்தனேயென்று புகழ்கின்ற துங் கெடாமற்படி என்னை இரட்சித்தருள வேண் டும் ஸ்ரீமந் நாராயணா, எ - று. 53

நீயண்டரா லடிபட்டநா ணினைவில்லைநின் னுத ரத்துளே, போயண்டகோ டியிலெந்தவேர் புரையிற் குளே விளையாடினேன், மாயங்கடந் தறிவேனலோ வரதன்கெடீர் வானோர்க்கெலாம், நாயன்கெடீர் விடு மென்பனே நாராயணா நாராயணா.

(இ-ள்.) தேவரீர் அசோதை முதலாகிய இடை யராலே அடிபட்ட நாளையிலே யடியேனுக்கு நினை வில்லாமற்போயது அது எதனாலே யென்றால் உமது குட்சிக்குள்ளே யிராநின்ற அண்டகோடிகளிலே எந்த சந்துக்களுக்குள்ளேயோ விளையாடினேன்; நீர் செய்யும் மாயம் நீங்கி யறிந்தேனேயானால், தேவதைகளுக்கெல்லா மும்மை வரதனென்றும் நாயகனென்றும் அந்த இடையர்களுக்குத் தெரியப் படச்சொல்லி கெடுவீர்கள் விட்டுவிடுங்கோளென்று நீக்கிவிடுவேன்; திருமேனி என்னமாக நொந்ததோ இப்போது பெரியோர்களே யறிந்தேன்; இருந்துஞ்

Koviloor Digital Library

சமயத்திலே உதவாதேபோனேன்; இனி வருந்தி என்ன பிரயோசனம் ஸ்ரீமந் நாராயணா, எ - று. 54

காசிக்குளுங் கயையிற்குளுங் கழியாதபா தக ஞகையால், வாசிக்குலைந் துனைவந்தியேன் குறையா குமோ வினையென்பதோர், வாசிக்குவந்தருள் செய் குவாய் வயித்திரா வணன்றங்கைதன், நாசிக்குவா ளெறிமையனே நாராயணா நாராயணா.

(இ - ள்.) காசியினிடத்திலேயுங் கயாவினிடத்தி லேயும் வாசம் பண்ணினாலும் நீங்காத பாவியான படியினாலே மனதுகூசிக் குலைந்து தேவரீரைத் தோத் திரம் பண்ணாமல் விட்டுவிட்டேன். அதினாலே உமக் குக் குறைவாகுமோ அடியேனுடைய வினையென் னும் வாசி தீரும்படியாய்வந்து கிருபை செய்தருள வேண்டும். முன்னாளிலே வயிரத்தோடுங் கூடிய இராவணன் தங்கையாகிய சூர்ப்பனகையினது மூக்கறும்படியாய்ச் செய்த வாளாயுதத்தையுடைய ஸ்ரீமந் நாராயணா. 55

தாளுக்கவா வியநாவினுஞ் சலியாதுவா சனி யானநோய், ஆளைக்கெடா தின்றைக்குவா வசையா மலே யன்றைக்குவா, தோளுக்குவா ளியைசெய்த வன் றுயர்கண்டிரா வணனின்றுபோய், நாளைக்கு வா வெனுமையனே நாராயணா நாராயணா.

(இ - ள்.) தேவரீருடைய திருவடிகளுக்கு ஆசை கொள்ளா நின்ற எனது நெஞ்சிலேயும் நாவிலேயும் வருத்தமில்லாமல் வரவேண்டும். சனியான நோயா னது அடிமையைக் கெடுத்துவிடாமல் இன்றைக்கே வரவேண்டும். சரம திசையிலே யமனைக்கண்டு சஞ் சலிக்கு முன்னமே அன்றைக்குவரவேண்டும். முன் னாளையில் பாணங்களைத் தோள்களிலே யழுந்தும்படி யாய் எய்து அவனது துயரத்தைக்கண்டு வயிரத்தை யுடைய ராவணா! நீ இன்றைக்குச்சென்று நாளைக்கு வாவென்று கிருபை பண்ணுகின்ற என்னையனாகிய ஸ்ரீமந் நாராயணா, எ - று. 56

Koviloor Digital Library

விக்கிற்கிடம் பொருமற்கிடம் விடுமூச்சுமே லெழுதற்கிடம், கக்கற்கிட மிருமற்கிடங் கருதற் கிடந் திருதற்கிடம், சொக்கற்கிடங் குளிர்தற்கிடஞ் சுடுதற்கிடம் வொருவற்கிடம், நக்கற்கிடந் தருமை யனே நாராயணா நாராயணா.

(இ - ள்.) விக்கலென்றும், பொருமலென்றும், மேல் மூச்சென்றும், கக்கலென்றும், இருமலென் றும், கருகலென்றும், திருகலென்றும், சொக்குத லென்றும், குளிர்தலென்றும், சுடுதலென்றும், பயப் படுதலென்றும், நக்க லென்றுஞ் சொல்லா நின்ற அந்தப் பீடைகளுக்கெல்லாம் இடங் கொடுத்திரா நின்ற தேகத்தை யுடைத்தாகிய அடியேனை இரட் சித் தருளவேண்டும் ஸ்ரீமந் நாராயணா, எ - று. 57

துளசீதளத் துளசீதளத் தூய்நீரதே குடிநீர தாம், உளதாயிரம் பெயரெண்ணுநூற் றொருகோடி மந் திரமேலதாம், வளமார்பின்மா மணியென்னவே மணியாமெனைப் பிணியென்செயும், நளகூபரன் பகைவென்றவா நாராயணா நாராயணா.

(இ - ள்.) திருத்துழாயினது தளங்களிலே பொ ருந்துங் குளிர்ந்த நீரே குடியிருக்குங் கிஷாயங்களுக் கெல்லாம் மேலாகிய கிஷாயநீராகவும், நிலைபெற்றிரா நின்ற ஆயிரந் திருநாமங்களும் நூற்றொருகோடி மந்திரங்களுக்கு மேலாகிய மந்திரமாகவும், வளம் பொருந்தாநின்ற திருமார்பிலேயிருக்குங் கவுஸ்துவ மணியே மணிகளுக்கெல்லாம் மேலாகிய மணியாக வும் இருக்கின்ற ஆராயு மிடத்தில் இதுவே மணிமந் திர அவுஷதமாக விருக்கப் பிணியானது அடியேனை என்ன செய்யும்? நளகூபரனுடைய சாபத்தைத் தீர்த் தருளாநின்ற ஸ்ரீமந் நாராயணா, எ - று. 58

சுவையோசையூ றொளிமாமணந் தொடராமணஞ் சுழல்கொண்டையும், கவைமானுமா னைவிடடிலுங் களிவண்டுமே விளிகின்றபோல், இவைதூயவென் றினிதூண்டிலே ளினியென்செய்வேன், நவை தீரவே யருள்செய்குவாய் நாராயணா நாராயணா.

Koviloor Digital Library

(இ - ள்.) ஆகார வருசையினாலே கொண்டை யும் மணியோசையினாலே கிளிமானும் தேகபரிசத் தினாலே ஆனையுந் தீபப்பிரகாசத்தினாலே விட்டிற் பூச்சியும் வாசனையினாலே மதத்தவண்டும் இவை ஐந் தும் மனந்தொடர்ந்து சுழன்று விழுந்திறந்து போவதுபோலே எனது பஞ்ச இந்திரியமும் இது நன்மையென்றும் இது தீமையென்றும் தெரிந்து புசிப்பதில்லை. இனி என் செய்வேன்; இந்தக்குற்றந் தீரும்படியாய்க் கிருபைசெய் தருளவேண்டும் ஸ்ரீமந் நாராயணா, எ - று. 59

நெட்டேணியின் பவியெட்டுமோ நின்னெட் டெழுத் தெழிலண்டமேல், எட்டாமெனும் பதமெட் டவே யிரதித்தசர்க் கரையேயதின், வட்டேபசும் பழமேசதா மதுரித்தவா ரமுதேயெனுள், நட்டே யருட் புனல்காட்டுவாய் நாராயணா நாராயணா.

(இ - ள்.) மூங்கில்களாலே நெடிதா யமைத்திரா நின்ற ஏணியானது படிகளிலே யேறினல் பரமபதம் எட்டமாட்டாது; ஆதலால் ஏழு ஆபரணத்தோடு கூடிய அண்டத்துக்குமேல் எட்டாவதாகிய அந்தப் பரமபதத்துக்கு ஏறிவர உபாயமுண்டு; அது யாதெ னில், நினது திருமந்திரமாகிய எட்டெழுத்தையும் எனது நெஞ்சிலே நட்டு இரம்மியமான சருக்கரை யுங் கற்கண்டும் கனிந்த முப்பழமும் நித்திய மதுர மாகிய ஆராவமிர்தமு மிவைகளுடைய சுவை போலே பரவும்படியாகக் கிருபைப்புனல் காட்டி னல் ஏறிவருவேன் ஸ்ரீமந் நாராயணா, எ - று. 60

காணுங்கணே குவியுங்கையே கருதுள்ளமே கனலாஞ்சனம். பூணும்புயம் புளகாங்கமே புகழ் நாவதே திகழ்கேள்வியே, ஆணும்பெணுஞ் சர ணென்பதே யவையல்லநா னபராதிகாண், நாணும் பெயர்க் காதாரமோ நாராயணா நாராயணா.

(இ - ள்.) தேவரீர் திருவடியைக் காணாநின்ற கண்களும் குவியாநின்ற கைகளும் நினையாநின்ற உள்ளங்களும் மந்திராக்கினி பொருந்திய சங்கு

Koviloor Digital Library

சக்கர வாஞ்சனம் பூணாநின்ற புஜங்களும் புளகங் கொள்ளாநின்ற தேகங்களும் புகழாநின்ற நாவுகளும் கேட்காநின்ற செவிகளும் இவைகள் பொருந்திக் குடும்பத்துடனே சரணாகதி பண்ணாநின்ற அடியார்களைப்போலப் பொருந்தின நானல்ல மிகுந்த அபராதத்தை யுடையவன்; ஆதலால் தரிசனம் பண்ண வெட்கத்தை யடைந்தேன்; இத்தன்மையாம் வெட்கத்தை யடைந்தபேர்களுக்கெல்லா மாதாரமாகிய ஸ்ரீமந் நாராயணா, எ - று. 61

கவிநல்லதோ கவிதீயதோ கனமூடனான் விதைவித்திடும், புவிநல்லதேல் விளைவெய்துமே புகழ் நல்லதேல் புகர்கேட்கவென், செவிநல்லதே லருணல்லதே செயனல்லதே வியனல்லதே, நவிநல்லதே வரிநாவிலே நாராயணா நாராயணா.

(இ - ள்.) மிகுந்த மூடனானவன் பாடாநின்ற கவிதையானது நன்மையானதோ தீமையானதோ தெரியவராது; விதைக்காநின்ற விதையானது பூமி நல்லதானபடியினாலே விளையுமே யன்றி விளையாமற் போவதில்லை; ஆதலா லுமது புகழுங் கிருபையுஞ் செயலும் இயலும் நல்லதானபடியினாலே அதை என் காதிலே கேட்டு நாவிலே தோத்திரம் பண்ணினால் நன்மை வருமேயன்றித் துன்பம் வருவதில்லை ஸ்ரீமந் நாராயணா, எ - று. 62

பசைகொண்டபா கவதாகமம் பருகாதுகா துருகாதுநெஞ், சசைகொண்டபா தகநீரிலே யமிழ் வேனையா ணவமாதியாம், கசைகொண்டமோ துகைதாக்குமோ கனவுள்ளநா னுனதன்பிலே, நசைகொண்டகா ரியமாகுமோ நாராயணாநாராயணா.

(இ - ள்.) தேவரீரிடத்திலே அன்பு பொருந்தாநின்ற பாகவதாள் சொல்லிய ஆகமசாரங்களை எனது காதானது கேட்பதுமில்லை; நெஞ்சான துருகுவது மில்லை; அலையாநின்ற பாதகக் கடலிலே விழுந்த என்னைக் காமம் வெகுளி மயக்கமென்கிற பிரம்மை யெடுத்துக்கொண்டு வினையானது மோதி

Koviloor Digital Library

யடிக்கச் செயுந் திருட்டு மனத்தை யுடைத்தான வரா யும்மிடத்திலே பக்தியில்லாமல் பரமபதத்துக் குக் காதல் கொண்டால் அந்தக் காரியமாகுமோ ஸ்ரீமந் நாராயணா, எ - று. 63

பலகூறுபட் டொருநெஞ்சினன் பரிசென்ன வெங்கணுமானவா, விலைகூறுகொண் டெனைவிண்ட தென் விரனீக்கிமோர் நுகர்வார்களோ, மலகூறலாய் நீதானுமென் மதிதன்னைவிட் டெனையொத்தனை, நல்கூறுவார் சுரதேனுவே நாராயணா நாராயணா.

(இ - ள்.) அடியேன் பலவிதமான இடையூறு பட்ட ஒரு நெஞ்சை யுடையவனானேன்; தேவரீர் வாய்வு பரிசம்போலே யெங்கு நிறைந்தவரானீர்; ஆதலால் என்னை மாத்திரம் நீங்கும்படியான குற் றத்தைத் தேடிவிட்ட தென்னோ? விரல் நீக்கி மோ ரைக் குடிக்கிற பேர்களு முளரோ? கிருபையுற்றுப் பெருகிய உண்மையான இருதயத்திலே என்னை மறந்துவிட்டபடியினாலே, தேவரீரும் அடியேனுஞ் சமானமேயன்றி அதிசயமில்லை; நன்மையாகத் தோத்திரம் பண்ணுகின்ற தேவர்களுக்குக் காம தேனுவாகிய ஸ்ரீமந் நாராயணா, எ - று. 64

வஞ்சித்ததே வதையாகுநீ வடவேங்கடந் தனி னிற்கவும், மிஞ்சித்திரிந் தனன்வீணிலே நிழல்கண்ட பின் வெயினிற்பரோ, கஞ்சித்தலத் தருளாளனே கனகோபுரக் கொடியாடுபொன், னஞ்சிற்றிருப் பதிவள்ளலே நாராயணா நாராயணா.

(இ - ள்.) அடியேனுடைய நெஞ்சிலே ஆசை கொள்ளாநின்ற தெய்வமாகிய தேவரீரிந்தத் திரு வேங்கடத்திலேதானே யெழுந்தருளி யிருப்பது தெரியாமல் வீணிலே உலகமெல்லாந் திரிந்தலைந் தேன்; இனி நிழல்கண்டபேர்கள் வெயிலிலே நிற்ப துண்டோ? கனம்பொருந்திய கோபுரங்களிலே கொடிகளாடாநின்றஅழகிய மதில்களோடுங்கூடிய காஞ்சித்தல முதலாகிய நூற்றெட்டு திருப்பதிகளி

Koviloor Digital Library

லேயும் அருளாளனென்றும், வள்ளலென்றும் விளங்கிய ஸ்ரீமந் நாராயணா, எ - று. 65

மைநாகமா ழியையாண்டவாழ் வகையென்ன நின்னருள்வெள்ளவாஞ், சைனுவிருந் ததிலூறவே கமைவேணுறத் தருமாறெவன், கையினலரிந் திடரண்ணிய கலிதீரநீ யருள்செய்திடும், நைனரினிற் சரியாவனே நாராயணா நாராயணா.

(இ - ள்.) மைநாகமலையானது சமுத்திரத்திலே முழுகி வாழுந்தன்மைபோல தேவரீருடைய கிருபா சமுத்திரத்திலே ஆசையாயிருந்து ஊறும்படியாய் பொருந்தின எனக்குக் கொடுக்கும்படியான மார்க்கம் எவ்விடத்திலேயோ தெரியவராது; பிரமாவினுடைய சிரத்தைக் கிள்ளிப் பொருந்தாநின்ற தரித்திரம் தீரும்படியாய்த் தேவரீர் கிருபை பண்ணுநின்ற ருத்திரனுக்குச் சமானமாக மாட்டுவேனே ஸ்ரீமந் நாராயணா, எ - று. 66

எமக்கென்றுவாழ் குடும்பத்திலே யிழுப்புண்ணுவா ரெமதாதையார், தமக்கொன்றுவைத் திலரென்பரே கழக்குள்ளபேர் வழக்குள்ளபேர், சுமக்கின்றவச் சுமையாளனச் சுதன்மற்றையசுமைகட்கெலாம், நமக்கென்னகா ரியமென்பரே நாராயணா நாராயணா.

(இ - ள்.) எம்மதென்று வாழாநின்ற குடும்பத்திலே அவதிப்படும்பேர்கள் நம்முடைய அவதிதீரும்படியாய் நம்முடைய பிதாக்கள் நமக்கு ஒன்றையும் வையாமற் போனார்களே யென்று பாவிகள் அழுவார்கள். இந்தச் சம்சாரமாகிய சுமையைச் சுமக்காநின்ற புருஷன் அச்சுதனிருக்கையாலே அந்தச் சுமைகளைத் தாங்க நமக்கென்ன காரியமென்று அறிவாளர் சந்தோஷிப்பார் ஸ்ரீமந் நாராயணா, எ - று.

பசுகட்குமா யினைபாடியிற் பலபாடியா டியுமாயர்தம், சிசுகட்குமா யினைமைந்தனுய்த் திருட்டுக்குமா யினையன்றுதான், முசுகட்குமா யினைநாயினேன்

Koviloor Digital Library

முசிப்பிக்குமா யருள்பூவையே, நசுக்கிப்பின்வா சனைகொள்வரோ நாராயணு நாராயணு.

(இ - ள்.) ஆயர்பாடியிலே யிராநின்ற பசுக் கூட்டங்களுக்கு இராட்சத கர்த்தாவாகியும், இடைப்பிள்ளைகளுக்குப் பாலுடனே ஆடல் காட்டி யுஞ் சிறுபிள்ளையாகிய வெண்ணெய் திருடுந் தொழி லுக்கு இசைந்தது மல்லாமல், முன்னுளையிலே குரங் குகளுக்கு நேசமாகி இரட்சித்த தேவரீர் நாயினே னுடைய தளர்ச்சிக்குக் கிருபை பண்ணுமல் புட் பத்தை நசுக்கி முகர்வாரைப்போல உபேக்ஷை பண்ணலாமோ ஸ்ரீமந் நாராயணு, எ - று. 68

குலங்காணவே குடிகாணவே குணம்காண வே பழுதாயினும், பலங்காணுநின் னடியாரெனிற் பவசாகர பரப்பெண்ணுளங், கலங்காமலே கலங் காணுமே கழலாமலே கழல்காணுமே, நலங்காமலே நலங்காணுமே நாராயணு நாராயணு.

(இ - ள்.) குலவன்மையுங் குலத்தின் நிலைமை யுங் குணப் பெருமையும் இவைகளைக் காணுமிடத் தில் பழுதாயிருந்தாலுந் தேவரீருக்கு அடிமைப்பட் டார்களேயானுல் மேன்மை பெறுவார்கள். ஆத லால் பாவ சமுத்திரப் பரப்புக்குள்ளே என்னுடைய நெஞ்சமானது கலங்கி ஒதுங்கிக் கலங்காமல் நலங் காணும் படியாய்க் கப்பலைப்போலே திருவடி காட்டவேண்டும் ஸ்ரீமந் நாராயணு, எ - று. 69

ஈன்றோனுநீ யலனுனுமவ் வியனுந்திவண் டின் னல்லனிற், போன்றோனெவன் பெறுபிள்ளையைப் போபோபிதா வினவாதிரான், சான்றோர்முனே யினிநோயைநீ தவிராயெனிற் சபதங்கெடும், நான் றோரைவி சியவாளனே நாராயணு நாராயணு.

(இ - ள்.) என்னைப் பெற்றவனும் நீயல்லவோ! நானும் அருமையான இயல்பொருந்திய உமது உந் தியிலே யிருந்தவனுமல்லவோ! உம்மைப்போலே எவரிருக்கிறுர்கள்; போபோ பிதாவானவன் பெற்ற பிள்ளையை வினவாதிருப்பனே? பெரியோர்கள் முன்

Koviloor Digital Library

பாக என்னுடைய நோயை இனி தீராமற்போனீரா னால், உமது சரணாகதி சம்ரட்சணை யென்கிற நெறி கெட்டுப் போகும்; பகைஞரை வீசிய வாளாயுதத்தை யுடைத்தாகிய ஸ்ரீமந் நாராயணா, எ - று. 70

கஞ்சப்பதந் தனையங்ஙனே கட்டிக்கரைந் தவசத்தராய், நெஞ்சத்துநா ரணவென்றுதா னியமித்து நித் திரைகொள்ளுவார், கொஞ்சத்தைநின் றளவாக்குவாய் குணபத்தைவாழ் குடியாக்குவாய், நஞ்சத்தையா ரமுதாக்குவாய் நாராயணா நாராயணா.

(இ - ள்.) தேவரீருடைய தாமரைபோலுந் திருவடியை உள்ளத்திலே நினைத்து ஞானக்கயிற்றினாலே அங்ஙனே கட்டிக்கரைந்தருகில் பரவசத்தை யடைந்து ஸ்ரீமந் நாராயணனே யென்று நிச்சயம் பண்ணி ஆனந்த நித்திரை கொள்ளுவார்கள். துரும்புபோலே யிருந்தாலும் அவர்களை மகாமேருவாகச் செய்தருளுவாய்; அதுவுமல்லாமல், புழுக்களை ஐஸ்வரியத்தை யுடைத்தாகிய குடும்பங்களாகவும், விஷத்தை அமிர்தமாகவுஞ் செய்தருளாநின்ற மகிமையுடைய ஸ்ரீமந் நாராயணா, எ - று. 71

எழிநெட்டிருப் பருமேனிவந் தென்கைக்ககப் படுமென்றுநான், தழுவிக்கொளத் திரிகின்றதென் சவசக்கரா சரமாகுநீ, வழுவிக்கொடங் கிங்கொடியே வரநல்லமுன் வரவஞ்சியே, நழுவிக்கொடே திரிகின்றதென் நாராயணா நாராயணா.

(இ - ள்.) நெடியதாய் வளர்ந்திராநின்ற உமது பருத்த திருமேனியானது எனது கைக்குள்ளே வந்தகப்படுமென்று நான் தழுவிக்கொள்ளத் திரிந்திட்டால், சகல சராசரங்களாகிய தேவரீர் என்முன்னே வந்து வரத்தைக் கொடுக்கப் பயந்தோ! அங்குமிங்குமோடி வழுவிக்கொண்டு நழுவிக்கொண்டுந் திரிகின்றதென சொல்லும் ஸ்ரீமந் நாராயணா, எ-று.

எனைக்காக்கநீ வரன்மேன்மையென் றிருப்பாய்பராக் கதுமுண்டுநின், தனைக்காத்தவா கனவில்லையோ தகுசேனைகா வலனில்லையோ, நினைக்காத்தசே

Koviloor Digital Library

யனுமில்லையோ நினைவில்லையோ விமையோர்பிரா, ணனைக்காத்தமா ருதியில்லையோ நாராயணு நாரா யணு.

(இ - ள்.) அடியேனை இரக்ஷிக்கவருதல் மேன்மை என்றெண்ணி யிருப்பீர்; இருக்குமெண்ணத்தில் பராக்குவந்ததோ? அல்லது தேவரீருக்கு வாகனமாகவுந் துணையாகவுங் காத்துக்கொண் டிராநின்ற கருடனுஞ் சேனைக்காவலனும் ஆதிசேஷனுந் தேவர்களாகிய வானவர்களுயிரை இரட்சிக்க சஞ்சீவி கொண்டுவந்த அநுமானுகிய இவர்களில்லாமற் போனுர்களோ? அல்லது திருவுள்ளத்தில் ஞாபகமில்லையோ? சொல்லும் ஸ்ரீமந் நாராயணு, எ - று.

கண்பொன்றுகோ மகன்மாற்றவன் கடுகொத்தபொய்க் கிருள்பார்த்ததோர், பண்பொன்றுநா லுரைசெய்யநான் பழுபொய்ச்சலால் விளையாடினேன், மண்பொன்றுநீ ரனல்பொன்விண் வளிபொன்றவே வருமென்றுநின், நண்பொன்றுநீ தரல்வேண்டுமே நாராயணு நாராயணு.

(இ - ள்.) கண் பார்வைபோன திருதராட்டிரன் குமாரனுகிய துரியோதனனுக்குப் பகைவனை தர்மராஜன் கடுகளவு பொய்சொன்னதினுலே யிருள்சூழ்ந்த நகரத்தைப் பார்த்தானென்று ஒப்பிலாத பண்பு பொருந்திய சாஸ்திரஞ் சொல்லச் செய்யும் அனேகமான பொய்களை விளையாட்டாகச் சொல்லினேன். எனக்கென்னகெதியோ தெரியவராது; பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் இந்தப் பஞ்சபூதங்களுந் தேவர் சூட்சியில் அடங்குங் காலத்திலே அடியேனும் வந்து சேருவேன்; அப்போதாகிலும் உமது நண்பொன்று மாத்திரம் வைத்து இரட்சித் தருளவேண்டும் ஸ்ரீமந் நாராயணு, எ - று. 74

போகேந்திரன் சிரமேந்துநின் பூதேவிபுல் லரையேந்தவே, ஆகேனெனு வுரைசெய்தவளா லடியேனையெத் துகைவேண்டுவாய், மாகேந்திரன் றன

Koviloor Digital Library

தம்பியே வடவேங்கடா சலவள்ளலே, நாகேந்திரயே நகமேந்தியே நாராயணா நாராயணா.

(இ - ள்.) சர்ப்பங்களுக்கு இராஜனாகிய ஆதிசேஷன் முடிகளிலே ஏந்தாநின்ற உமது தேவியாகிய பூமிதேவியானவள் பாபிகளைத் தாங்குவதற்கு வருத்தமா யிருக்கிறதென்று தேவரீருடைய திருச்செவியிலே விண்ணப்பஞ் செய்தருள்வாளாகில், அடியேனைமாத்திரந் தாங்கிக்கொள்ளும்படியாய் வேண்டிக்கொள்ள வேண்டும். தேவேந்திரனுக்குத் தம்பியாகவும், திருவேங்கடமலைக்கு நாயகனாகவும் பொருந்திப் பாஞ்சசன்னியத்தையும், கோவர்த்தனகிரியையும் ஏந்தியருளாநின்ற ஸ்ரீமந் நாராயணா, எ-று.

ஊழியிற்பிறந் திடுபாவநோ யுடலைத்தொடாவகைதந்திடாய், வாழிக்குநா யகனிந்திரன் மனுவின் பதம் பெறவிச்சியேன், ஆழிக்கையுன் கொடைமிக்கதென் றடியேன்மிகப் பெறலாகுமோ, நாழிக்குடங் கலங்கொள்ளுமோ நாராயணா நாராயணா.

(இ - ள்.) இகத்திலே மனுச்சக்கரவர்த்தியினுடைய பதமும், பரத்திலே வாழ்வுக்கு நாயகனாகிய இந்திரனுடைய பதமும் இச்சையாக வேண்டுவதே யில்லை. ஆதலால் ஊழ்வினையினாலே பிறந்திடாநின்ற பாவ நோயானது அடியேனுடைய தேகத்திலே சேராவகை செய்தருளிப் பரமபதத்தைத் தேவரீர் கடாட்சித் தருளவேண்டும். திருவாழி தரித்த திருக்கரத்தையுடையவனே! உம்மிடத்திலே மிகுந்த தியாகம் உண்டென்று நானிச்சைகொண்டதினாலே மிகுந்த வருமோ என் பிராப்தி எவ்வளவோ அவ்வளவு முடியும். அது எத்தன்மை என்றால், நாழிக்குடத்தைக் கொண்டுபோய்ச் சமுத்திரத்திலே யமிழ்த்ததினால் நாழிகொள்ளுமே யன்றி கலங்கொள்ளுவதில்லை ஸ்ரீமந் நாராயணா, எ-று. 76

தனுவுக்குளே யுளராறுபேர் சலிகைக்குநா யகருன்னைநான், பனுவற்சொலா வகைதட்டுவார் பழகிச்சதா நெரிகட்டுவார், அனுவற்றசோ ரரையெற்

Koviloor Digital Library

றியே யடியேனையா ளாயென்னவே, நணுகிக் கொடே திரிகின்றனன் நாராயணா நாராயணா.

(இ - ள்.) என்னுடைய தேகத்துக்குள்ளே இராகம் காமம் குரோதம் லோபம் மோகம் மதம்மாச்சரியம் என்று சொல்லாநின்ற இந்த ஆறு குற்றங்களுஞ் சலிகைக்கு நாயகராய் நித்தியமும் பழகித் தேவரீரே என்னைத் தம்மிட கவிதைகளாலே பாடாத வகை தொடுப்பதுமல்லாமல், நன்மார்க்கத்தையும் கொடுக்காநின்ற கிரமம் நீங்கிய திருடர்களைக் கொன்றடியேனை இரட்சித்தருளுங் கர்த்தனே யென்று அடுத்துக்கொண்டு திரிகின்றனன் ஸ்ரீமந் நாராயணா, எ - று. 77

உடைச்சேலைதா குழைச்சோலைதா வுனச்சோறு தா பணப்பேறுதா, கடைப்பூவடா வடைக்காயடா கறுக்காசடா கடைக்கோளனே, கிடைக்கோடிவா முடிச்சேதடா கிறுப்பாவையார் வெறுப்பார் பொலா, நடைக்காசையாயிழந்தேனலோ நாராயணா நாராயணா.

(இ - ள்.) உடுக்கிறதற்குச் சேலை தாடாவென்றும், காதுக்குப்பொன்னோலை தாடாவென்றும், உண்கிறதற்குச் சோறு தாடாவென்றும், மிகுந்த பணங்களைத் தாடாவென்றும், கடைப்புஷ்பங்களை வாங்கித் தாடாவென்றும், பாக்கு வெற்றிலை தாடாவென்றும், கறிக்குக் காசு தாடாவென்றும், கடைப்பட்ட கோளனேயென்றும், படுக்கைக்கு ஓடிவாடாவென்றும், அடிச்சோமனிலே முடிச்சே தடாவென்றும், இருதாகப்பேசி வெறுத்துக் கொள்ளாநின்ற வேசியருடைய பொல்லாத நடத்தைகளிலே ஆசையாய்த் திரவியத்தை யெல்லா மிழந்துவிட்டு விழலனேன் ஸ்ரீமந் நாராயணா, எ - று. 78

கன்னிப்பெருங் கடலோடுவான் கம்பத்திலே விளையாடுவான், உன்னிக்கொளும் புயனென்னநோ யொருநாட்டுநெஞ் சொருமிக்கிலேன், என்னிற்பயந் தெளிவித்திடா யெல்லோர்க்குமிந் தென்மட்டிலே,

Koviloor Digital Library

நன்னிக்குணம் பிடிபட்டது நாராயணா நாராயணா.

(இ - ள்.) பெரிதாகிய கடலிலே நீந்தவும், கம்பத்திலேறி விளையாடவும் பொருந்திய இப்புத்தியை யுடையவன் சென்ற பிற்பாடு நினைத்துக் கொள்ளாநின்ற பயங்களைப்போலே நோயானது வருத்தியும் எனது நெஞ்சு ஒருமித்ததில்லை. என்னிடத்தில் உண்டாகிய பயத்தைத் தெளிவித்தருளவேண்டும் யாவருக்கும் கிருபை செய்கிற நீ என்மட்டுஞ் செய்தருள உமக்கு லோபகுணம் பிடிபட்டதோ ஸ்ரீமந் நாராயணா, எ - று.

79

புட்புள்ளவன் கொடியென்னவே பொற்பென்னவன் கலையென்னவே, கட்புண்டரீ கமலத்தினோர் கண்ணென்னவே கரைகின்றிலேன், சட்புள்ளவன் சமயத்திலே சலமண்டினேன் சரணண்டினேன், நட்புள்ளதோ பகையுள்ளதோ நாராயணா நாராயணா.

(இ - ள்.) பட்சி ரூபமாகிய கருடக்கொடியானேயென்றும், வண்மைபெற்ற சுவர்ன வஸ்திரனே யென்றுந், தேனோடுங்கூடிய சிவந்த தாமரைக் கண்ணனேயென்றுங்கரைந்துருகாத பாவியானவன் உமது சமயத்திலே வயிராக்கியம் பொருந்தித் திருவடியடைந்தேன்; அடியேனிடத்திலே நேசமோ பகையிருக்குமோ தெரியவராது ஸ்ரீமந் நாராயணா, எ-று.

கச்சுப்பிதிர்ந் தெழுகொங்கையார் கடைவோளழிப் படைகோடிகள், கச்சுக்கிடந் திடுநெஞ்சிலே னிலாயம்புதைத் தவருய்வரே, பிச்சுத்தயர்பரனெனநீ பெருமந்திரந் தனிலாற்றுவாய், நச்சுப்பெருஞ் சுதை வேலையாய் நாராயணா நாராயணா.

(இ - ள்.) கச்சடங்காமலெழுந்த கொங்கைகளை யுடைய கன்னியர் கடைக்கண் பார்வையாகிய ஆயுதகோடிகள் எனது நெஞ்சிலே தைத்துருவிப் புண்ணாகியது. அந்த நோயை என் சொல்வேன்; ஒரு பாணம் பட்டவர்கள் பிழைப்பதில்லையே; ஆதலால் நித்தியபரனென்கையினாலே இந்தப் பாணங்களைப் பிடுங்கிப் புண்களை உமது பெரிதாகிய திருமந்திரத்தி

Koviloor Digital Library

ஞலே அறும்படிசெய்தருளவேண்டும் ஆசையுடனே உயர்ந்த அமிர்தகடலிலேதுயிலும் ஸ்ரீமந் நாராயணு.

எய்தாரிருந் திடவம்பைநோ மிழிவாளர்போற் பழிபாதகம், செய்தாரிருந் திடலன்றியே தெய்வந் தனைச் சிதைவாகவே, வைதாவதென் விதனத்திலே வழிதப்புமே வாய்பாருமே, நைதாதுவின் வரகாரமே நாராயணு நாராயணு.

(இ - ள்.) பாணத்தை எய்தவனிருக்க அம்பை நோகாநின்ற இழிவாளர்போலே பழிபாதகஞ் செய்த நானல்லவோ அநுபவிக்க வேண்டும்; அதுவன்றி தேவரீரை விதனத்திலே கெடுதலாக வைத்தென்ன பிரயோசனமென்ருல் நன்மார்க்கமுஞ் சத்தியமுங் கெட்டுப்போகுமே யன்றி வேறில்லை; சரம திசையிலே நைந்து போகாநின்ற தாதுவுக்கு வைத்தியனுகிய ஸ்ரீமந் நாராயணு, எ - று. 82

முகிலுக்குவே யடிபட்டவோர் முதுமக்கள் போற் றுணிவிக்குநோய், மிகவற்பமோ விடுவித்திடாய் விமதத்தநீர் மடுவுக்குளே, துகிலைக்கொடாய் துகில்விட்டிடாய் தொழவெட்கமே விமையக்கணுர், நகிலுக்குள்வீழ் நகையச்சுதா நாராயணு நாராயணு.

(இ - ள்.) மேக வருஷத்தி லடிபட்ட கிழவர்கள் வருத்தத்தை யடைந்து இறக்குமாப்போலே அடியவனிறக்கும்படியாய் துணிந்து செய்யாநின்ற நோயானது பெருகுதல் சொற்பமல்லவே! ஆதலாலது நீங்கும்படிக்குக் கடாட்சித்தருள வேண்டும். முன்னுளையிலே பரிசுத்தமான ஜலத்தோடுங்கூடிய யமுனுநதியிலே ஸ்நானம் பண்ணுநின்ற கோபிகா ஸ்திரீகளுடைய வஸ்திரங்களை அபகரித்துக் கொண்டுபோய்க் கொடாமலும் விட்டுவிடாமலும் நின்ற காலத்திலே அவர்களுமைத் தொழுது கேட்க வெட்கத்தை யுடையவர்களாய் மைதீட்டிய கண் பார்வையானது தங்கள் கொங்கையிலே படியத் தக்கதாகத் தலையைக் கவிழ்ந்துகொள்ள நகைத்தருளா நின்ற ஸ்ரீமந் நாராயணு, எ - று. 83

Koviloor Digital Library

கமலத்தைவந் தயல்வண்டுணுங் கருதாததோர் வகையொக்கவே, அமலத்தநீ ரிடைவாழினும் மது போலவே யயலாரெலாம், நிமலப்பதந் தொழுமூரி லே நிலைபெற்றிருந் துணைவந்தியேன், ஞமலிக்கு மோ ரருள்செய்திடு நாராயணா நாராயணா.

(இ - ள்.) பரிசுத்தமான ஜலத்தோடுங்கூடிய தடாகத்திலே யிராநின்ற தாமரையினுடைய பெருமையை அத்துடனே பிறந்த தவளை யறியமாட்டாது பக்கங்களிலேயிருந்து வண்டுகளதின் தேனைச் சாப்பிட்டுச் சந்தோஷத்தை யடையுமாப்போலே தேவரீர் நிலைபெற்றிராநின்ற ஊரிலே அடியேனிருந்துந் தேவரீரைத் தோத்திரம் பண்ணிக் கடைத்தேற வறியேன்; அயலிலே இராநின்ற பிரம்மா முதலாகிய பேர்களெல்லாந் தேவரீருடைய பரிசுத்தமான திருவடியைத் தொழுது கடைத்தேறுகிறார்கள்; கடைகெட்ட சுவானத்துக்கும் கிருபை செய்தருளின ஸ்ரீமந் நாராயணா, எ - று. 84

என்மாடுவீ டென்பிள்ளைபெண் டென்காணி மண் ணெனச்சொத்தெனும், தன்மாலிலே யறியாத பேர் தனதாகுமோ தானுவதார், வன்மாயமென் றதுகண்டுநின் வடவேங்கடம் பதிவைகியே, நன் மானுயர் நிலைநிற்பதமே நாராயணா நாராயணா.

(இ - ள்) என்மாடென்றும், என்வீடென்றும், என் பிள்ளையென்றும், என் பெண்சாதியென்றும், என் காணி மண்ணென்றும், என்னுடைமை யென்றும் தங்கள் மயக்கத்தினால் மூடரானபேர் சொந்தமென் றிருப்பார்கள். அவைகள் தங்களதாகுமோ? அவைகளுக்கும் இவர்களுக்குஞ் சம்பந்தமென்ன? இவையெல்லாம் வலிய மாய்கையென்று தெளிந்து நன்மைபெற்ற மானிடரெல்லாந் தேவரீருடைய திருமலையை நித்திய பதார்த்தமென்று நிலை பெறுவார்கள் ஸ்ரீமந் நாராயணா, எ - று. 85

பரலோகமும் பரரூபமும் பரபோகமும் பரமாயுவும், சுரலோகமுஞ் சுயரூபமுஞ் சுரபோகமுஞ்

Koviloor Digital Library

சுரவாயுவும், திரலோகமென் றிவையாவையுந் திரு வேங்கடந் தனிலுள்ளதால், நரலோகமே மிகநன்று காண் நாராயணா நாராயணா.

(இ-ள்.) பரமபதமும் திவ்விய திருமேனியும் நித்தியானந்தமும் நித்திய தத்துவமற்ற இவையாவர் நாடு மிமையவர் மேனியு மிமையவர் ஆயுளும் இமையவர் போகமும் இமையவர்களுக்கு நாயகனாகிய இந்திரனுடைய பதவியும் இவைகள் முதலாகிய ஐசுவரியங்களெல்லாந் தமது திருவேங்கடத்தை யடைந்தபேர்களுக்கெல்லா முண்டாகிய தன்மையினாலே இந்த நரலோகமே மிகுந்த நன்மையானது ஸ்ரீமந் நாராயணா, எ - று. 86

அசுவாதவன் பழிவேடரா யடியேனுடம் பிணி நோயெலாம், கசவாதுதின் பவர்போலவே கவராம லிங் கருள்கூறுவாய், குசவாயுதா சிறுகோவலா குறுவேதியா குலமன்னர்மா, னசவாவியிற் பயிலன் னனே நாராயணா நாராயணா.

(இ - ள்.) அசைவில்லாமல் வலியபழியைச் செய்யாநின்ற வேடரானவர்கள் தயவில்லாமல் மிருகங்களைக் கொன்று தின்னுமாப்போலே அடியேனுடைய தேகத்தைப் பிணியானது பிடுங்கித் தின்னாமல் இவ்விடத்திற் கிருபை செய்தருளவேண்டும். கலப்பை ஆயுதத்தை யுடையவனே இளமையாகிய கோபாலனே குட்டனாகிய வாமனனே சூரியகுல மன்னவனே மானச மடுவிலே விளையாடாநின்ற அன்னரூபமாகிய ஸ்ரீமந் நாராயணா, எ - று. 87

மீன்கூறுமங் கிடிபாதியாண் மிருதங்குறள் பர காளிகோ, மான்கூறலா யுதனையன்மேல் வருவாசி யும் பெருவாசிமேல், தேன்கூறுமா கமசாரமுஞ் சிறுபோகமோ கமசாரமும், நான்கூறுமங் குருபத் தனே நாராயணா நாராயணா.

(இ-ள்.) மச்சமென்றும் கூர்மமென்றும் வராக மென்றும் நரசிங்கமென்றும் வாமனமென்றும் பரசுராமனென்றும் ஸ்ரீராமனென்றும் பலராமனென்றும்

Koviloor Digital Library

ஸ்ரீ கிருஷ்ணனென்றும் வந்ததல்லாமல் மேலும் கற்கியாய் வருவதினாலே உமக்குப் பெரிதாகிய பலனுண்டோ மதுரம் பொருந்திய ஆகம சாஸ்திரமுஞ் சிற்றின்பமாகிய காம சாஸ்திரம் நான்கு சாரமும் ஓதுவித்த குருவாகிய காந்திபருக்குப் பக்தனாகிய ஸ்ரீமந் நாராயணா, எ-று. 88

மிறுக்கத்தகா தெனதாவியின் விளக்கிற்குநின்னருணெய்யிடாய், பொறுக்கத்தகா ததுமெய்யுடல் புழுக்கத்தகா தொருபோரிலே, குறிக்கிட்டமோ நடுக்கிட்டிடக் குலேவாணனார்திரடோளெலாம்,நறுக்கிக்கையோர் துணைவிட்டவா நாராயணா நாராயணா.

(இ-ள்.) அவமாகிய எனது தேகமானது புழுக்கங்கொண்டு பொறுக்கத்தகாமல் இறந்துபோகிறது தகுதியான காரியமல்லவே; ஆதலால், உயிராகிய விளக்கானது அவிந்து போகாமல் தேவரீர் கிருபையாகிய நெய்யது பெய்தருள வேண்டும்; ஒப்பில்லாத யுத்தமுகத்திலே குறுக்கிட்ட சிவன் முதலாகிய பேர் நடுக்கங்கொள்ளப் பொல்லாத வாணாசுரனுடைய விஸ்தாரமான தோள்களை யெல்லாஞ் சக்கரத்தினாலே நறுக்கி இரண்டு கைமாத்திரம் விட்டருளிய ஸ்ரீமந் நாராயணா, எ-று. 89

புன்சொல்லிலே யகப்பட்டதும் போதாமலே யவமேற்றெனக், கென்சொல்லுவோ மெனவெண்ணியோ யாதோவெனக் கீயாதுநீ, தென்சொல்லிலே வடசொல்லிலே திருவாய்மொழிச் சதுர்வேதமா, நல்சொல்லிலே விளையாடுவாய் நாராயணா நாராயணா.

(இ-ள்.) அடியேனுடைய மூட புத்தியினாலே படாநின்ற புல்லிதாகிய கவிதைச் சொல்லிலே அகப்பட்டதும் போதாமல் எனது அக்கியானத்தையெல்லாம் ஏற்றபடியினாலே இவனுக்கு என்ன சொல்லுவோமென்று திருவுள்ளத்தி லெண்ணியதோ என்னமோ கிருபைசெய்தருளாமலிருப்பதை அறிகிலேன். தமிழாகிய தென்சொல்லிலேயும், கிரந்தமாகிய வடசொல்லிலேயும், திருவாய்மொழி யென்னும் நான்கு

Koviloor Digital Library

வேதத்தினுடைய நன்மைபெற்றசொல்லிலேயுந் திருவிளையாடல் செய்தருளாநின்ற ஸ்ரீமந் நாராயணா.

மெலியாமையுந் திருஞானமு மிகுபோகமுந் திடதேகமும், சலியாமையும் பகைநாதமுந் தனராசியுந் தகுசீலமும், கலியாணமும் பெறநீதரக் கடனுளியாற் பினுமுன்னைநான், நலியாமலே யருள்கூறுவாய் நாராயணா நாராயணா.

(இ - ள்.) மெலிதலில்லாமையும், அழகிய ஞானமும், மிகுந்த போகமும், வலிய தேகமும், சலியாமையும், பகை நாசமும், திரவிய ராசியும், யோக்கியமான ஆசாரமும்கலியாணம் இவையெல்லாந் தேவரீரிடத்தில் பெறும்படியான கடனுளியானதால், இனி உம்மை நான் வருத்தாமல் பூரணமான கிருபைசெய்தருளவேண்டும் ஸ்ரீமந் நாராயணா, எ - று. 91

சமத்தேதுநல் லறமேதருந் தயையேதருந் தவமேதுமிக், கமைத்தேதுமே லடைவேதுகா ரணமேதுபூ ரணமேதுசங், கமத்தேதுரா கதவேது சொல் கமையேதுசொல் கதியாவுநீ, நமத்தேதுவா ரகைவாசனே நாராயணா நாராயணா.

(இ-ள்.) சாமர்த்தியங்கள் தானேது; நல்ல தருமம் தானேது; அருமையான தயவுகள்தானேது; அரிய தவங்கள் தானேது; மிகுந்த அமைப்புகள் தானேது; மேலாகிய அடைவுகள்தானேது; காரணங்கள் தானேது; பூரணங்கள்தானேது; கூட்டங்கள் தானேது; ஆணவங்கள் தானேது; சொல்லிய பொறுமைகள் தானேது; சொல்லாநின்ற மோட்சங்கள்தானேது; இவை யாவும் தேவரீருடைய கிருபையயன்றி வேறில்லை; ஆதலால் உமது திருவடிகளுக்கே நமஸ்காரஞ்செய்து நின்றேன்; துவாரகா வாசனாகிய ஸ்ரீமந் நாராயணா, எ - று. 92

பித்தங்கயஞ் சொறிதேமல்கம் பிதமீளைகா மாலைபாண்டுவுன், மத்தஞ்சுரஞ் சளிசன்னிகால் வலிசூலைக் குதல்கக்குவா, யுத்தம்பனந் தலைநோவுமற் றுள நோயெலாந் தொடராமலாள், நத்தின்முகற் கொரு

Koviloor Digital Library

காலனே நாராயணா நாராயணா.

(இ - ள்.) பித்தம் க்ஷயம் சொறி வெள்ளைப் பாண்டு நரை ஈளை காமாலை பாண்டு உன்மத்தம் சுரம் சளி சன்னி கால்வலி சூலை விக்கல் கக்குவாய் தம்பனம் தலைநோய் மற்றுஞ் சொல்லாநின்ற நோய்களெல்லாம் அடியேனைத் தொடராமல் விரட்சித் தருள வேண்டும். நத்துமுகனுக்கு ஒரு இயமனாகிய ஸ்ரீமந் நாராயணா, எ - று.

93

துறையூருமா முதலைக்குலச் சுனையொத்தமன் னவர்வாசலில், குறையூர்வதுங் கசைசாடவே குலை கின்றதுந் தலைசோரியாய், முறையூர்வதும் பிறருன் னையே முனிபாவமுந் தெரியேனலோ, நறையூரனே கருடாசலா நாராயணா நாராயணா.

(இ - ள்.) முதலைக்குலஞ் சஞ்சரியாநின்ற துறை யையுடைய சுனைபோலிராநின்ற துஷ்டமன்னவர் வாசலிலே குறைகளைச் சொல்லுமிடத்திலே அவர் கள் தருமம் விசாரியாமல் நேர்ந்தபடிக்குப் பிரம்புக ளாலே அடித்திட தேகம் நொந்து தலைகளிலே உதி ரம் பெருகும்போது முறையமிட்டுங் கேள்வியில்லா மற் பிற்பாடு தேவரீரைத்தெய்வமேயென்று வெறுத் துக் கொள்பவருடைய பாவந் தீர்வதேயில்லை; ஆக லால் தேவரீர் சந்நிதானத்தில் முன்னமே முறைய மிட்டேன் திருவூரிலேயுந் திருவேங்கிடமாகிய கரு டாசலத்திலேயும் நிலைபெற்ற ஸ்ரீமந்நாராயணா, எ-று.

பிணிவிட்டதே விதியானவையும் பிழைவிட்டதே சுகசீவியாய்ப், பணிவிட்டதே நமனுரெனும் பகை விட்டதே பலபூசலும், தணிவிட்டதே யதிஞானமே ரதவிட்டதே யுனையோதவாய், நணிவிட்டதே யென் மட்டிலே நாராயணா நாராயணா.

(இ - ள்.) அடியேனுடைய சனனங்கள் தோறுந் தொடராநின்ற பிணிகளையும் விதிகளையும் மன்மதன் சண்டைகளையும் இவை முதலாகியயாவையும் நீக்கிச் சுகஜீவியாகவும் அதிக ஞானியாகவும் வாக்கினாலே உம்மை ஓதும்படியாகவும் என்மட்டிலே பொருந்து

Koviloor Digital Library

தலாகத் தேவரீருடைய கடாட்ச வீக்ஷணியஞ் செய்தருளியது ஸ்ரீமந் நாராயணு, எ - று. 95

வாய்செய்தபுண் ணியங்கோடியென் வழி செய்தபுண் ணியங்கோடியென், தாய்செய்தபுண் ணியங்கோடிதந் தையர்செய்தபுண் ணியங்கோடி யென், பாசெய்தபுண் ணியங்கோடியென் பதி செய்தபுண் ணியங்கோடியென், நான்செய்தபுண் ணியங்கோடிகாண் நாராயணு நாராயணு.

(இ - ள்.) எனது வாக்கும் எனது மரபும் எனது மாதாவும் எனது பிதாவும் எனது பாடலும் எனது ஊரும் எனது நாவும் இவைகளெல்லாஞ் செய்த புண்ணியம் அனேகங் கோடியானபடியி ஞலே தேவரீரைப் பிரசன்னமாகக் காணக் கிடைத் தது ஸ்ரீமந் நாராயணு, எ - று. 96

உன்கோயிலென் கால்சூழவு முன்பாதமென் கண்காணவும், நின்பாடலென் வாய்பாடவு நின் காரியங் கைசெய்யவும், என்காதுநின் புகழ்கேட் கவு மென்னெஞ்சுநின் னினைவுன்னவும், நன்காகால் வரமேயருள் நாராயணு நாராயணு.

(இ-ள்.) உமது திருக்கோயிலை யென்கால் சூழ வும், உமது திருவடியைக் கண்காணவும், உமது சரித்திரத்தை என் வாய் பாடவும், உமது கைங்கரி யத்தை என் கைசெய்யவும், உமது புகழை எனது காது கேட்கவும், உமது தியானத்தை என்னெஞ்சு செய்யவும் இத்தன்மையாகிய நல்ல வரத்தைக் கொடுத்தருள வேண்டும் ஸ்ரீமந் நாராயணு, எ-று.

இதற்கண்ணெலா நாராயணு வெங்கெங்கணு நாராயணு, சொற்கண்ணெலா நாராயணு தொழி லெங்கணு நாராயணு, முற்கண்ணெலா நாராயணு முகமெங்கணு நாராயணு, நற்கெண்ணெலா நாரா யணு நாராயணு நாராயணு.

(இ - ள்.) வீடுகள் யாவையினும், வெளிகள் யாவையினும், சொல்லுகள் யாவையினும், தொழில் கள் யாவையினும், முகங்கள் யாவையினும் பரிபூர

Koviloor Digital Library

ணமா யிருப்பது தேவரீரேயன்றி வேறொருவ ருண்டோ? ஸ்ரீமந் நாராயணா, எ - று. 98

தேறுந்திருப் பதிவேங்கடந் தெரிசித்துநா ரண வென்றுநான், நூறும்படிப் பவர்பண்ணுவார் நூ றும்மிருந் துலகாண்டபின், பேறும்பெரும் பிள்ளைப் பெறும் பெருமைப்பெறும் பெறுவிப்பையே, நாறுந்துழா யணிமார்பனே நாராயணா நாராயணா.

(இ-ள்.) வேதமுடிவிலே தேறாநின்ற திருவேங் கடமென்னுந் திருப்பதியைத் தரிசித்து ஸ்ரீமந் நாரா யண சதகம் நூறு பாடலையும் படிப்பவர்களும், அர்த்தங்க ளாராய்பவர்களும் நூறுவருஷமுமிருந்து பிள்ளைகள் முதலாகிய உலக காட்சியினது பலனை அனுபவித்த பிற்பாடு அவர்களுக்குப் பெருமை யைப்பெற்ற பரமபதத்தைக் கடாட்சித்தருளாநின்ற பரிமளிக்குந் திருத்துழா யணிந்த திருமார்பை யுடைய ஸ்ரீமந் நாராயணா, எ - று. 99

நனிவாழிநின் பல்கோயிலு நனிவாழிநின் பல தேவிமார், நனிவாழிநின் னடியாரெலா நனிவாழி நின் பலவைபவம், நனிவாழிநின் வடவேங்கட நனி வாழிநின் கவிகற்றபேர், நனிவாழிநின் கவிகேட்ட பேர் நாராயணா நாராயணா.

(இ - ள்.) சோழநாட்டிலும் பாண்டிய நாட்டி லும் மலைநாட்டிலும் நடுநாட்டிலும் தொண்டைநாட் டிலும் வடநாட்டிலும் தேவரீர் நித்தியவைபவமாய் விளங்காநின்ற திருவரங்கம் பெரிய கோயில் முதல் பரமபதம் அந்தியமாகவிராநின்ற நூற்றெட்டுத் திருப்பதியிலும் பாகவதர்கள் உச்சீவிக்கத் திருக் கோயில் கொண்டு எழுந்தருளி யிராநின்ற தேவரீ ருடைய திருக் கோயில்களெல்லாம் பல்லாண்டு பல்லாண்டு மிகுதியாக வாழக்கடவது; தேவரீ ருடைய வக்ஷஸ்தலத்தி லின்பமுற்று வீற்றிரா நின்ற மகாலட்சுமியும் பூமிப் பிராட்டியும் நீளா தேவியும் பல்லாண்டு பல்லாண்டு மிகுதியாக வாழக் கடவது; திரிகாலங்களிலும் இடைவிடாமல்

Koviloor Digital Library

தமது திருவுள்ளமே ஆலயமாகச் செய்துக்கொண்டு தேவரீரைத் தியானஞ்செய்யும் கடல்சூழ்ந்த இவ்வுலகத்தின்கண் ணுள்ள பரம பாகவதர்களியாவரும் பல்லாண்டு மிகுதியாகவாழவும்; தேவரீருடைய மகிமையுற்று விளங்கும் வைபவங்கள் பல்லாண்டுவாழவும்; சமஸ்கிர்த பாஷைகளும், திராவிட பாஷைகளும், எல்லையாகிய சதுர்வேதங்களும், மற்ற சாஸ்திரங்களும், பொருள்களுக்கெல்லாம் முடிவாகியும்,தர்மமே சொரூபமாகியும், பூமியும் பூமிதேவிக்கு மணிமுடியாகியும், தனக்கொப்பில்லாமல் பெருமை பொருந்திய சொர்னமயமாகியும் ஓங்கிய தேவரீரெழுந்தருளியிராநின்ற வடக்கின்கணுள்ள திருவேங்கடமலையும் பல்லாண்டு பல்லாண்டு மிகுதியாக வாழக்கடவது; திரிகாலக்கியானிகளாகிய வசிஷ்ட வாமதேவ விஸ்வாமித்திர வியாச பராசுக சவுனகாதி ரிஷிகளும், மகாத்துமாக்களாகிய நம்மாழ்வார் முதலிய ஆழ்வார்களும்,பாதாத்தாரகராகிய இராமாநுஜாசாரியரும், வரகவிகளான தண்டிபவபூதி காளிதாசன் கம்பர் முதலாகிய கவிச்சக்ரவர்த்திகளும், பரமபாகவதோத்தமராகிய அழகியமணவாளப்பிள்ளைப் பெருமாளய்யங்கார் முதலாகிய பரமபாகவத பக்தர்களுமாகிய இவர்களாற் செய்தருளிய ஸ்தோத்திரங்களும், வைஷ்ணவாகமங்களாகிய ஸ்ரீ பாஞ்சராத்திர வைகாசனங்களும், இதிகாசங்களாகிய இராமாயண பாரதங்களும், வாமம் வராகமுதலிய புராணங்களும் மற்றுமுள்ள நூல்களுமாகிய இவைகளால் சொல்லப்பட்டிருக்கிற தேவரீருடைய நித்யக[illegible]தியானஞ் செய்த பாகவதர்களும் பல்லாண்டு பல்லாண்டு மிகுதியாக வாழக்கடவது; இவ்வாறு மகிமையுற்ற தேவரீர் விஷயமாக செய்தருளிய கவிகளைச் சிரவணானந்தத்துடன் கேள்வியுற்ற பாகவதர்களியாவரும் பல்லாண்டு பல்லாண்டு மிகுதியாக வாழக்கடவது ஸ்ரீமந் நாராயணா, எ - று. 100

வடவேங்கட நாராயண சதகம் முற்றிற்று.

Koviloor Digital Library

A. No. 4132

Koviloor Digital Library

விளம்பரம்

இதனல் சகலமான கனதனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்: இப்புஸ்தகமும், அடியில்கண்ட புஸ்தகங்களும், இன்னும் ஸ்கூலுக்குரிய புஸ்தகங்களும், ஆறுமுக நாவலர் புஸ்தகங்களும், கதை, அம்மானை, நாடகம், விலாசம், கீர்த்தனை, புராணம், ஜோசியம், வைத்தியம், சதகம், சில்லரை புஸ்தகங்களும் வேண்டியவர்கள் வி. பி. மூலியமாகவும், நேரிலும்விலை சரசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

எமது விலாசம்:—

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
நெ. 41, வெங்கடராமய்யர் தெரு,
ஜி. டி. சென்னை.